உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை (30-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:124

# தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுமாறு ஐ. தே. முன்னணிக்கு பிரதமர் பணிப்பு

கொழும்பு,மார்ச்30

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

- இப்படி ஐக்கிய தேசிய முன்னணியின் சகல மாவட்ட அமைப்பாளர்களுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் நடத்திவரும் பேச்சுக்களின் பயனாக ஏற்படும் கூட்டு முன்னணி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேசமயம், நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி முன்வரும் பட்சத்தில் அத்தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணியும் தயாராகி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக முன்னணியின் அமைப்பாளர்களுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

தேர்தலை எதிர்கொள்ளத்தக்க வகையில் தொகுதிகளுக்குச் சென்று தேர்தல் பணிகளை ஆரம்பிக்கும்படி அமைப்பாளர்களை அவர் கேட்டுள்ளார்.

சகல அமைச்சர்களும் பிரதமரும் மாகாணம் மாகாணமாகச் சென்று மக்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆதரவைத் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக அமைச்சர்கள் நேற்று முன்தினம் தென்மாகாணத்துக்கு சென்றுள்ளனர். மூன்று தினங்கள் அங்கு தங்கிநிற்கும் அமைச்சர்கள் மக்களுடன் கலந்துரையாடுவதுடன் சிறு சிறு கூட்டங்களையும் நடத்திவருகின்றனர்.

சமாதான முயற்சிகளுக்கு மக்களின் ஆதரவைத் திரட்டும் வகையில் மக்களுக்கு விளக்கமளிக்கப்படுவதாக அமைச்சர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மாத்தறை சனத் ஜயசூரியா விளையாட்டரங்கில் இன்று பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகின்றார்.

மாகாணம் மாகாணமாக மேற்கொள்ளவிருக்கும் பிரசார நடவடிக்கையில் அமைச்சர்களும் பிரதமரும் வடக்குக்கும் விஜயம் செய்யவிருக்கின்றனர். (ம-3)

# நகரின் மத்தியில் படைத்தளமா?

# விடுதலைப் புலிகள் கடும் சீற்றம்!

## சமாதானப் பேச்சில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் எனக் கருத்து

கிளிநொச்சி,மார்ச்30

**யாழ்.நகரின் மத்தியில் மாநகரசபை வளாகம் மற்றும் அதன் சுற்றாடல் பகுதியில் படையினர் புதிய முகாம் அமைக்கும் விவகாரத்தில் கடும்போக்கு நிலையை விடுதலைப்புலிகள் கடைப்பிடிப்பர் எனத் தெரியவருகின்றது.**

**இந்த விவகாரம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், தமது நிலைப்பாட்டை விளக்கி வெகுவிரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடுவார்கள் என்றும் அறியவந்தது.**

**அதேசமயம், இந்த இராணுவ முகாம் அமைக்கும் முயற்சிக்கு எதிராக கடும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வெகுஜன அமைப்புக்கள் தயாராகி வருகின்றன.**

யாழ். நகரப் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இருந்து வரும் இராணுவத்தின் 512ஆவது தலைமையக முகாமை அங்கிருந்து அகற்றுமாறு பலதரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் இராணுவம் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

இப்போது, திடீரென அந்த இடத்தில் இருந்து வெளியேறுவதற்கு வசதியாக நகரின் மத்தியில் உள்ள மாநகர சபை வளாகம் மற்றும் யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஈராக் மீது அமெரிக்கா நடத்திவரும் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதலில் சிக்கி காயமடைந்த பச்சிளங்குழந்தையொன்று அமெரிக்க இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டுசெல்லப்படுகின்றது. நேற்று முன்தினம் பக்தாத்தில் சந்தைமீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்துள்ளது. போர் ஆரம்பித்த பின்னர் ஒரே தாக்குதலில் ஏற்பட்ட மிகப்பெரிய உயிர்ச்சேதம் இதுவாகும்.

# புதிய இராணுவத்தளம் அமைப்பதை எதிர்த்து மீனவர் சங்கம் போர்க்கொடி

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்மாநகரசபை வளாகம் மற்றும் கரையோரப் பகுதியில் புதிதாக இராணுவத்தளம் அமைப்பதை ஆட்சேபித்தும் - முதலாம் குறுக்கு வீதியில் உள்ள ஐஸ் தொழிற்சாலை இயங்க அனுமதிக்குமாறு கோரியும் - வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பல்வேறு வடிவில் எதிர்ப்புப் போராட்டங்களை இந்த வார ஆரம்பத்தில் நடத்துவதென முடிவு செய்துள்ளது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

மேற்கண்ட கோரிக்கைகள் அடங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழு கடந்த 9 மாதங்களாகக் கூடவில்லை

## அதிருப்தி தெரிவிக்கிறார் ஶ்ரீகாந்தா



யாழ்ப்பாணம்,மார்ச்30

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எட்டுப் பேர் கொண்ட நடவடிக்கைக்குழுவின் கூட்டம் கடந்த 9 மாதங்களாக கூட்டப்படவில்லை என்று அதிருப்தி தெரிவித்திருக்கின்றார் ரெலோவின் முதல்வர் என். ஶ்ரீகாந்தா.

கூட்டமைப்பின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட இக்குழு தேசியப் பட்டியல் உறுப்பினரான அமரர் மு.சிவசிதம்பரத்தின் மறைவுக்குப் பின்னர் புதிய தேசியப்பட்டியல் உறுப்பினரைத் தெரிவு செய்வதற்காகக் கூடியது. அதன் பின்னர் இன்னும் அது கூடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

முதலில் இதன் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவு செய்யப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# போராளி தாக்கப்பட்ட சம்பவம்; பொலீஸார் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்30

கொடிகாமம், கச்சாய் வீதியில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு விடுதலைப் புலிப்போராளி இசையாளனைத் தாக்கிய பொலீஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக விடுதலைப் புலிகளுக்கு பொலீஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### அடிப்படை வசதிகள் செய்துதரக் கோரி

# மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் நேற்று முழுநாளும் மறியற்போர்!

யாழ்ப்பாணம்,மார்ச்30

மருதனார்மடம் மரக்கறிச் சந்தையில் அடிப்படை வசதிகள் செய்யப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்தை வியாபாரிகள் நேற்று முழுநாள் மறியற்போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

இந்தப் போராட்டத்தினால் நேற்று சந்தை முற்றாகச் செயலிழந்தது.

மருதனார்மடம் சந்தைக்குள் மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி மற்றும மின்சார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை. அத்துடன் சந்தைக்குள் கட்டிவைத்துவிட்டுப போகும் மரக்கறிகள் மற்றும் ஏனைய பொருள்களுக்கு இரவில் உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை.


இந்த வசதிகளைச் செய்து தருமாறு பலதடவைகள் வலி.தெற்குப் பிரதேச சபைக்கு கோரிக்கை விடுத்தும இதுவரை எந்த பலனும் கிடைக்கவில்லை.

இந்த வசதிகளைத் துரிதகதியில் ஏற்படுத்தித் தருமாறு கோரியே இந்த ஒருநாள் அடையாள மறியற்போராட்டத்தை ஏற்பாடு செய்தோம் - என்று சந்தை வியாபாரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்தையில் முழுநேர வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் பெண்கள் பலரும் அடிப்படை வசதிகள் இன்மையால் மிகவும் சிரமப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மிகவிரைவில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படாத பட்சத்தில் மீண்டும் இப்படியான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தாங்கள் தீர்மானித்திருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். இதேவேளை -

இந்தச் சந்தையைப் பார்வையிடுவதற்கு அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் அரச அதிகாரிகள் சிலர் நேற்றுக காலை அங்கு விஜயம் செய்யவிருந்த போதிலும் இறுதி நேரத்தில் அந்த விஜயம் கைவிடப்பட்டது எனத் தெரியவந்தது. (ஜ-4)



மருதனார்மடம் சந்தையில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தின் போது சுலோக அட்டைகளை தாங்கியவாறு வியாபாரிகள் சந்தையின் பிரதான வாயிலில் நிற்பதை முதலாவது படத்திலும் சந்தையின் உட்புற பகுதிகள் வெறிச்சோடிக் கிடப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:- அற்புதன்)*

### விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவரின் மீது

# தாக்குதல் நடத்திய சிறை ஊழியர்களின் அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

பிரதம நீதியரசரை அவதூறு செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் மைகல் இம்மானுவேல் பெர்னாண்டோவை தாக்கியவர்கள் என்று கூறப்படும் சிறைச்சாலை ஊழியர்களை நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அது நடைபெறவில்லை.

வேறுபல காரணங்களினால் அடையாள அணிவகுப்பு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

விஞ்ஞான, மனித உரிமைகள் பேரவையின் பொதுச் செயலாளரான இம்மானுவேல் அண்மையில் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசரை தகாத வார்த்தைகளால் திட்டினார் என்ற குற்றத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறைச்சாலையில் இருந்த போது அவர் சிறைச்சாலை ஊழியர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டாரென விசாரணையில் தெரியவந்தது.

ஆகவே, அவரைத் தாக்கிய சிறைச்சாலை ஊழியர்களை அடையாளம் காணும் பொருட்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அடையாள அணிவகுப்பு நேற்றுமுன்தினம் நடைபெறவில்லை.

தன்னைச் சிறை ஊழியர்கள் தாக்கியமை மனித உரிமையை மீறும் செயலென இம்மானுவேல் பெர்னாண்டோ உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்க, நிஹால் ஜயசிங்க, அசோக டி சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இம்மானுவேலின் மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

### கையால் அள்ளி தண்ணீர் குடித்த சமயம்

# தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்த இளம் குடும்பஸ்தர் மூழ்கி மரணம்!

யாழ்ப்பாணம்,மார்ச்30

தோட்டக்கிணற்றில் கையால் தண்ணீர் எடுத்துக் குடித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் அந்தக் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து மரணமானார்.

இந்தப் பரிதாப மரணம் பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்மகாலிங்கம் (வயது 40) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் குறித்து சம்பவ இடத்தில் மல்லாகம் நீதிவான் நேற்று மரணவிசாரணைகளை நடத்தினார்.

மரணமானவர் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்பவர். தோட்டக கிணற்றில் எப்போதும் தண்ணீர் நிலமட்டம் வரை நிற்பது வழமை. மரணமானவர் எப்பொழுதுமே அந்தக் கிணற்றில் இருந்து கையாலேயே ஏந்தித் தண்ணீர் குடிப்பார்.

சம்பவம் நடைபெற்ற அன்று கிணற்றின் வெகு அருகில் நின்ற மரம் ஒன்றின் கிளையில் பிடித்தபடி தண்ணீர் குடித்துள்ளார். அந்தக் கிளை முறிந்ததால் அவர் கிணற்றினுள் விழுந்துளளார் - என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்து மரணம் என நீதிவான் தீர்ப்பு வழங்கினார். (ம-3)



மருதனார்மடம் சந்தையில் தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் மலசலகூடம் இதுதான்.

### விரிவுரைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் 'சிறுவணிக முகாமைத்துவம்' கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று காலை 10 மணி முதல மீண்டும் ஆரம்பமாகி நடைபெறும் என பிராந்திய இயக்குநர் அறிவித்துள்ளார். (எ-48)

# தமிழ் மக்களின் நிலைப்பாட்டை மறுக்கும் கூட்டணித் தலைவரின் கருத்து ஆபத்தானது!

## ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்று தாங்கள் ஒரு போதும் கூறவில்லையென அண்மையில் கூட்டணித் தலைவர் தெரிவித்த கருத்தானது சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டிற்கு பாரிய தீங்கை விளைவிக்கக் கூடியது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ கட்சியின் முதல்வர் என். ஸ்ரீகாந்தா.

யாழ்.நகரில் உள்ள ரெலோ கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தல காலத்தில் நான்கு கட்சிக் கூட்டமைப்பானது ஒரே அணியாக இணைந்த பொழுது ஓர் அரசியல் நிலைப்பாட்டை மக்களுக்கு எடுத்துச் சொல்லியிருந்தோம். இந்த நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்கு - அதாவது தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகள் திருப்திப்படுத்தக்கூடிய ஒரு நீதியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வின் ஊடாகத் தீர்க்கப்படும் வரையில் எமது இனத்தின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் மாத்திரமே என்பதுதான் அந்த நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளுடன்தான் இனப் பிரச்சினை தொடர்பான சகல பேச்சுக்களும நடத்தப்பட வேண்டும். அவர்களைத்தவிர வேறு எந்தவொரு அமைப்புடனும் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்படக் கூடாது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தல் காலத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

ஆனால் இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் ஏற்படும் சமாதான ஜனநாயக சூழலில் எந்த அரசியல் கட்சிகளும் தமிழினத்தின் மத்தியில் செயற்படலாம். அரசியலுக்கு யாரும் வரலாம், போகலாம் இதுதான் ஜனநாயகம். இந்த நிலைப்பாட்டிற்கு மாறாக கூட்டணியின் சில தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இது ஏன்? எதனால் என்பது எமக்கு விளங்கவில்லை. இந்த நிலைமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

எமது மக்கள் இப்பொழுதும் நிர்க்கதியான நிலையில்தான் உள்ளார்கள். அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரையில் எந்தவொரு பதவியைப் பற்றியும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சிந்திக்க முடியாது. உபசபாநாயகர் பதவியைக் கூட்டமைப்பின் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஏற்றுக் கொள்வதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அரைச் சபாநாயகர் பதவிக்கோ அல்லது முழுச் சபாநாயகர் பதவிக்கோ மக்கள் அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கவில்லை.

தாங்கள்தான் எதையும் செய்ய வேண்டும் என்று மூத்த அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு கட்சி நினைக்கிறது. இதனை ஏனைய அரசியல் கட்சிகளாகிய நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதன் மூலம் எங்களை நாங்களே கோமாளிக் கும்பலாக மாற்றிக் கொள்ள முடியாது. இவர்கள் தமது மரபுவழி அரசியல் மூலம் தமிழ் இனத்துக்கு எதையும் பெற்றுக்கொடுக்கவில்லை. ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு இயக்கம் தேர்தலில் போட்டியிடாது மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட ஓர் அரசியல் புதுமை, கடந்த தேர்தலில்தான் இடம்பெற்றது. அவர்கள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை - என்றார் ஸ்ரீகாந்தா. (ஜ-10)

### பளைப் பிரதேச சபையில்

# முள்ளிப்பற்று அலுவலகம் நாளைமுதல் தனியார் கட்டடத்தில் இயங்கும்

கடந்த 13 வருடங்களாக மூடப்பட்டிருந்த பளைப் பிரதேச சபையின் முள்ளிப்பற்று (இயக்கச்சி) உப அலுவலகம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இயக்கச்சியிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கவுள்ளது.

1990ஆம் ஆண்டு ஆனையிறவில் யுத்தம் ஆரம்பித்ததையடுத்து இவ் உப அலுவலகம் மூடப்பட்டு, பளைப் பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் இயங்கிவந்தது. தற்போது இயக்கச்சிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து இவ் உப அலுவகம் மீண்டும் இயங்கவுள்ளது.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற யுத்தத்தினால் உப அலுவலகக கட்டடம் இருந்த இடம் தெரியாத அளவுக்கு சேதமடைந்துள்ளமையும் உப அலுவலக கட்டடத்தில் இயங்கிய பொது நூலகம், ஆயுர்வேத மருந்தகம் ஆகியவற்றின் கட்டடங்களும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- பிரதேச செயலக புலோப்பளை அலுவலகம் புலோப்பளையில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பளையில் இயங்கிய புலோப்பளை உப அலுவலகம் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினால் கட்டடம் முற்றாகச் சேமடைந்ததை அடுத்து புலோப்பளையில் இயங்குவதாக பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

### இலங்கை போக்குவரத்துச் சபைக்கு

# டீசலால் மட்டும் மாதமொன்றுக்கு 2 கோடி 49 லட்சம் ரூபா நஷ்டம்

## சபைத்தலைவர் தெரிவிப்பு

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மாதமொன்றுக்கு டீசல் செலவினால் மட்டும் 2 கோடி 49 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக சபைத் தலைவர் யூ.எல்.எம்.பாருக் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு மாதமொன்றுக்கு திறைசேரி 12 கோடி ரூபாவை (மானியமாக) உதவித் தொகையாக வழங்குகிறது.

இதில் 5 கோடி 70 லட்சம் ரூபா ஊழியர் சேமலாபநிதி கொடுப்பதற்கென ஒதுக்கப்படுகிறது. மிகுதித் தொகை தொழிலாளர்களுக்கு ஏற்கனவே மாதமொன்றுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள 2ஆயிரத்து 600 ரூபா சம்பள அதிகரிப்பை கொடுப்பதற்காக செலவிடப்படுகிறது.

இ.போ.சவில் நாற்பதாயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். 6 ஆயிரம் பஸ்கள் நாடு முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பல பஸ் டிப்போக்கள் நட்டத்தில் இயங்குவதால் குறிப்பிட்ட தினத்தில் சம்பளத்தை முறையாக வழங்க முடியாத நிலையும் உருவாகியுள்ளது.

இ.போ.சபை எவ்வாறு மறுசீரமைக்கலாம் என்பது பற்றிய அரசின் ஆலோசனைகளை பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றேன் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (எ)



பக்தாத்தில் உள்ள தகவல்துறை அமைச்சுக்கு முன்பாக ஏ.கே.47 ரக துப்பாக்கியை தாங்கியவாறு நிற்கும் ஈராக்கிய சிறுவன் ஒருவன். (ஐ)

## உணவு, ஆயுத விநியோகம் பாதிப்பு

# தரைப் படைகளின் நகர்வு நிறுத்தம்!

பக்தாத், மார்ச்30

ஈராக் மீதான யுத்தத்தில் பக்தாத் நகரம் நோக்கி அமெரிக்கப் படைகள் முன்னேறி வருகின்ற நிலையில், உணவு, ஆயுதப் பற்றாக்குறை காரணமாக வடக்குப் பகுதியில் மட்டும் 4 முதல் 6 நாள்களுக்கு தரைப்படை முன்னேறுவதை நிறுத்திவைக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அதேநேரத்தில் ஈராக் படைகள் மீது அமெரிக்காவின் வான்வெளித் தாக்குதலை கடுமையாக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒரு பிரிவு போர்ப்படைக்கு உணவு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாலும், இராணுவ வாகனங்களுக்குத் தேவையான பெற்றோல் உட்பட சில அத்தியாவசிய பொருள்களில் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் இம்முடிவு எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

எனினும், வடபகுதியில் ஈராக் வீரர்கள் கடுமையாக பதிலடி தாக்குதல் நடத்துவதுதான் அமெரிக்காவின் இம்முடிவுக்கு காரணம் என்றும் கருதப்படுகிறது. (ஐ)

# ஈராக்குக்கு சிரியா உதவுவதாக குற்றஞ்சாட்டுகிறது அமெரிக்கா!

## போர் நடவடிக்கையாகவே கருதப்படும் என எச்சரிக்கை



அமெரிக்க குண்டுக்கு இலக்கான ஒரு ஈராக்கிய குழந்தை உயிருக்காக போராடுகிறது...

வாஷிங்டன், மார்ச்30

ஈராக் படைகளுக்கு சிரியா இராணுவ உதவிகளை வழங்கி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது. இதனை ஒரு போர் நடவடிக்கையாகவே அமெரிக்கா கருதுகிறது என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்திருக்கிறார்.

ஈராக்கின் எல்லையில் சிரியா அமைந்துள்ளது. அந்நாடு ஈராக் படைகளுக்கு இராணுவ சாதனங்களை எல்லை தாண்டி விநியோகித்து வருவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டை சிரியா மறுத்திருக்கிறது.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளில் சிவிலியன்களுக்கு ஏற்பட்டுவரும் சேதங்களை உலகின் கண்களுக்கு மறைப்பதற்காக அமெரிக்கா இப்படி ஒரு பொய்யைக் கூறுகின்றது - என்று சிரியாவின் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கூட்டணி படைகள் பக்தாத்தை முற்றுகையிட்டால் அதிபர் சதாம் ஹுசைன் தனது குடும்பத்தாருடன் சிரியாவுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருக்கிறார் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை -

ஈராக்கிய படைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தனது பிரஜைகள், எல்லை தாண்டி ஈராக்கினுள் பிரவேசிப்பதற்கு ஈரான் அனுமதித்துள்ளது என்றும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது. (ஐ)



ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், ஒஸாமா பின்லேடன் ஆகியோரின் படங்களை தாங்கியவாறு அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பாகிஸ்தான் மாணவர்களையே படத்தில் காண்கிறீர்கள். இந்த ஆர்ப்பாட்டப் பேரணி வடமேற்கு நகரான பெஷாவரில் நடந்தது.

# பாலைவனங்களில் சுட்டெரிக்கும் வெய்யில் அமெரிக்கப் படைகளுக்கு அடுத்த சவால்!

பக்தாத், மார்ச்30

ஈராக் பாலைவனங்களில் அடுத்து வரும் வாரங்களில் வெய்யிலின் கொடுமை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. மார்ச் முதல் ஜூலை வரையான காலப் பகுதியில் அங்கு கொளுத்தும் வெய்யில் படிப்படியாக அதிகரிக்கும் சில இடங்களில் வெப்பம் 117 டிகிரி வரை செல்லும். ஜூலையில இது 123 டிகிரியாக உயரும் என்று காலநிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்போதைய போர் மேலும் பல வாரங்களுக்கு நீடிக்குமானால் பாலைவனங்களில் தங்கியுள்ள கூட்டணிப் படைகள் சுட்டெரிக்கும் வெய்யிலில் வதங்கிப்போக நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1991இல் நடந்த வளைகுடா யுத்தம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மட்டுமே நீடித்தது. ஆனால், இந்த முறை பல லட்சம் அமெரிக்கத் துருப்புகள் வெய்யில்கால போரில் ஈடுபடும் நிலை தோன்றியுள்ளது.

வெய்யில் தீவிரமடைவதால் போர் மேலும் சில மாதம் நீடிப்பதையே சதாம் ஹுசைன் விரும்பக்கூடும் என்று அமெரிக்க ஆய்வாளர்கள் நம்புகின்றனர். (ஐ)

# காஷ்மீரில் 6 பேரின் மூக்கை அறுத்து வீசினர் தீவிரவாதிகள்

ஜம்மு, மார்ச்30

காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இரவு 6 பேரின் மூக்கை அறுத்து வீசியுள்ளனர் தீவிரவாதிகள்.

ஜம்முவில் உள்ள ரஜௌரி மாவட்டத்தில் அமைந்துள்ள பனிஹுட் கிராமத்தில் நேற்றிரவு நுழைந்த சில அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் மிர் வாயிஸ் என்பவரின் வீட்டில் நுழைந்தனர். அவரது மனைவி பாத்திமா, அவரது மகன் ரசாக் மற்றும் உறவினர் ஒருவரது மூக்கை அறுத்து வீசினர்.

அங்கிருந்து வெளியேறிய அவர்கள் நூர் ஹுசேன் என்பவரது வீட்டில் நுழைந்து அவரது மூக்கையும் மற்றும் அவரது இரு மகன்களின் மூக்கையும் துண்டித்தனர்.

பின்னர் தீவிரவாதிகள் அனைவரும் அங்கிருந்து தப்பிவிட்டனர். பாதிக்கப்பட்டவர்களின் அலறலைக் கேட்ட பொதுமக்களில் சிலர் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்திற்கு இதுவரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. (ஐ)

# யேமன் மீது தாக்குவதற்கு தீவிரவாதிகள் திட்டமாம்!

யேமனில் அமெரிக்காவின் முக்கிய அலுவலகங்கள் மீது தாக்குதல நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. அரச செலவில் தூதரக அதிகாரிகள் யேமனை விட்டு வெளியேறுவதற்கும் அமெரிக்கா அனுமதியளித்துள்ளது. ஈராக் மீது அமெரிக்கா படையெடுப்பு நடத்தியதால் யேமனில் அமெரிக்காவிற்கு எதிரான கருத்து பரவலாக நிலவி வருகிறது.

மேலும், தீவிரவாதிகள் அச்சுறுத்தல் காரணமாகவும் அந்த நாட்டை விட்டு வெளியேறுவது குறித்து பரிசீலிக்கும்படி அமெரிக்கர்களை வாஷிங்டன் வெள்ளிக்கிழமை கேட்டுக்கொண்டுள்ளது.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல், போர் காரணமாக நிலவும் பதற்றம், அமெரிக்காவிற்கு எதிராக அதிகரித்து வரும் மக்கள் கருத்து ஆகியவை யேமனில் வாழும் அமெரிக்கர்களை பதற்றத்தில் கொண்டு போய் நிறுத்தியுள்ளது என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. (ஐ)

# உளவு பார்க்கும் செயற்கைக்கோள் ஜப்பான் விண்ணுக்கு அனுப்பியது

உளவு பார்க்கும் செயற்கைக்கோளை ஜப்பான் முதன்முறையாக வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக ஏவியது.

'எச்2ஏ' ரக ரொக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தக் கூடும் என்ற அச்சம் மேலோங்கிய நிலையில் உளவு பார்க்கும் செயற்கைக்கோளை ஜப்பான் விண்ணில் செலுத்தியுள்ளது.

ரோக்கியோவில் இருந்து ஆயிரம் கி.மீ.தென்மேற்கே தானிகாஷிமா என்ற தீவில் இருந்து இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது என்று தேசிய விண்வெளி ஆய்வு மையத் துறை அமைச்சர் யாஷிஹிரோ நகமுரா தெரிவித்தார். பூமியில் ஒரு மீற்றர் அளவு கொண்ட பொருளையும் படம் பிடித்து அடையாளம் காட்டு திறனுடையது இந்த உளவு செயற்கைக்கோள் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக அமெரிக்க பாதுகாப்புக் குடையின் கீழ் இருந்து வந்தது ஜப்பான். 1998 ஆம் ஆண்டில் வடகொரியா நடுத்தர ரக ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை நடத்தியது. இதைத் தொடர்ந்து பாதுகாப்பில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற விழிப்புணர்வு ஜப்பானுக்கு ஏற்பட்டது. அதற்கான பணிகளில் தீவிரமாக இறங்கியது. (ஐ)




## கெயார் சர்வதேசம் - இலங்கை

**எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம் (LIFT PROJECT)**

**விவசாய பயிற்சி உதவியாளர் (ATA) - ஆட்சேர்ப்பு**

(1 வெற்றிடம் - வன்னி)

ஆற்றலும் கடின உழைப்பும் கொண்ட இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. *பதவி:-* விவசாயப்பயிற்சி உதவியாளர்
2. *கல்வித்தகைமைகள்:-* அடிப்படை விவசாய பட்டப்படிப்பு அல்லது விவசாய டிப்ளோமா
3. *முன் அனுபவம்:-* தொடர்புடைய துறையில் மூன்று வருட அனுபவம்
4. *சம்பளம்:-* தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும்.
5. *நியமனம்:-* புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படை

தகுதியுடையோர் சுயவிவரக் கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Director, Human Resources, Care International - Sri Lanka, No.7A, Gregory's Road, Colombo-7
E.Mail : hr@care.Ik
என்ற முகவரிக்கு 10.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

- வன்னியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை
- விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, முழங்காவிலில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கப்படலாம்.

பணிப்பாளர்,மனிதவள அபிவிருத்தி
கெயார் சர்வதேசம், இலங்கை.

(C-27029)

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## விஞ்ஞான பீடம்

**வெளிவாரிப் பட்ட நெறிகள் - விஞ்ஞானம் - 2002/2003**

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பாடநெறிகளுக்குத் தம்மை வெளிவாரி மாணவர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உயிரியல் விஞ்ஞானம் (B.Sc.-Bio Sc.)
(6 அரையாண்டு கற்கை நெறி)
(3 ஆண்டுகள்)

பௌதிக விஞ்ஞானம் (B.Sc.-Phy.Sc.)
(6 அரையாண்டு கற்கை நெறி)
(3 ஆண்டுகள்)

**பாடநெறிகள் ஆங்கில மொழிமூலம் நடத்தப்படும்**

பதிவு செய்வதற்கான தகைமைகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள் பற்றிய விவரங்கள், விண்ணப்பப் படிவங்கள் என்பவற்றை ரூபா ஐம்பதிற்கான (ரூபா 50) காசுக்கட்டளையினை "நிதியாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை" என்னும் பெயரில் எடுக்கப்பட்டு (செங்கலடி தபால் நிலையத்தில் மாற்றக்கக்க வகையில்) சுயவிலாசமிடப்பட்ட ரூ.4.50 முத்திரை ஒட்டிய 9"X6" அளவுள்ள தபால் உறை ஒன்றுடன் உதவிப்பதிவாளர் / வெளிவாரிப்பட்ட நெறிகள், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி என்னும் விலாசத்திற்கு 12.04.2003 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்படிவங்கள் கிடைக்க வேண்டிய முடிவு திகதி 05.05.2003**

விண்ணப்பதாரிகள் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கற்க விரும்பும் பாடநெறியினைத் தவறாது குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு: ஒவ்வொரு பாடநெறிக்கும் போதியளவு எண்ணிக்கையுள்ள விண்ணப்பதாரிகள் பதிவு செய்யும் பட்சத்திலேயே, அப்பாடநெறி நடத்தப்படும்.

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,*
*வந்தாறுமூலை,*
*செங்கலடி.*
*25.03.2003*

(C-27020)

**- பதில் பதிவாளர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22 - 07 - 1923



மறைவு
28 - 02 - 2003

## திருமதி தங்கம்மா ஆறுமுகம்

(கந்தரோடை)

பாலூட்டி வளர்த்த அம்மா! – எங்கள்
பாசக் கயிறு அறுந்ததே
அறிவூட்டி வளர்த்த அம்மா – எங்களை
அழவிட்டுச் சென்றாயோ?
விதி ஒன்று வந்தவேளை – உன்
பிரிவும் சேர்ந்து வந்ததே!
கதறிக்தான் அழுகின்றோம் – உன்
உயிரை மீட்க முடியவில்லையே!

*ஆறுமுகம் வீதி, கந்தரோடை,*
*சுன்னாகம்.*

(15972)

**- பிள்ளைகள்.**

உதயன்

# 'தீர்த்து' வைப்பதில் விரைவு காட்டுக!

கிழக்குக் கடலில் சீன மீன்பிடி ட்றோலர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது இறுதி அறிக்கையை அரசுக்கும் புலிகளுக்கும் சமர்ப்பித்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் கண்காணிப்புக் குழு தெரிவித்திருக்கும் கருத்துக்கள் எச்சரிக்கை மணியை எழுப்பியிருக்கின்றன என்றே கருதவேண்டியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி இருள்வேளையில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 15 சீன மீனவர்களும் இரு இலங்கையருமாக மொத்தம் 17 பேர் காணாமற்போயினர். அவர்களில் 8 சீனர்களின் சடலங்கள் வடக்குக்கரையில் ஒதுங்கியிருக்கின்றன. ஏனையோரின கதி தெரியவில்லை. இவர்களைவிட ஓர் இலங்கையரும் எட்டுச் சீனரும் காப்பாற்றப்பட்டிருக்கின்றார்கள்.

ஆழ்கடலில் படகுகளில் வந்த துப்பாக்கிதாரிகளால் 'ஆ யுவான் யூ - 225' என்ற இந்த ட்றோலர் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் சர்வதேச மட்டங்கள் வரை பரபரப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

வழமைபோல் - "செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மேலே" என்பது போல - இந்தச் சம்பவத்துக்கான குற்றச்சாட்டையும் தென்னிலங்கை ஊடகங்கள் பெரும்பாலும் புலிகள் மேலே முந்திக்கொண்டு சுமத்தின.

எனினும், இக்குற்றச்சாட்டை புலிகள் அடியோடு நிராகரித்தனர்.

இவ்விடயம் குறித்து விசாரணைகளை நடத்திய கண்காணிப்புக் குழு இப்போது தனது இறுதி அறிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளோடோ அல்லது கடற்படையோடோ தொடர்பு இல்லாத ஆயுதக் குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது என்ற முடிவை கண்காணிப்புக் குழு கூறியிருக்கின்றது.

இத்தாக்குதலைப் புலிகள் இயக்கமோ அல்லது கடற்படையோ செய்தது என்பதை நிரூபிக்கும் சான்றுகளோ, ஆதாரங்களோ இல்லை என்று குறிப்பிட்டுள்ள கண்காணிப்புக் குழு, இத்தாக்குதலை நடத்திய ஆயுதக்குழு குறித்து எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றது.

"அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ அல்லது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ இக்குழு இயங்கக்கூடும். அவ்வாறு இயங்கக்கூடிய குழுவினால் தற்போதைய அமைதி முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் பேராபத்து ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது."

"எனவே இரு தரப்பினரும் - அரசு, புலிகள் இரு சாராரும் - இந்தக் குழுவினரைத் தேடிக் கண்டுபிடித்து, கைதுசெய்து, ஆயுதங்களைக் களைவது அவசியம்" - என்று கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் சீன நாட்டு மீனவர்களே பாதிக்கப்பட்டனர். இந்த அனர்த்தம் பற்றிய தகவல் கிடைத்ததும் பீஜிங்கில் உள்ள சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலக உடனடியாக சீனாவுடன் தொடர்புகொண்டார்.

கொழும்பில் பிரதமர் ரணில் தமது அலுவலகத்தில் ஸ்தாபித்துள்ள சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகமாகவும், அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் நால்வரில் ஒருவராகவும் பேர்னாட் குணதிலக செயலாற்றுவதால் தற்போதைய அமைதிச் சூழ்நிலை குறித்து அதிகம் தெரிந்தவராகவும் இருக்கின்றார். இதனால் இச்சம்பவம் குறித்தும் அதில் வேண்டுமென்றே புலிகளின் பெயரை இழுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்தும் சீன அரசுக்கு அவர் தெளிவுபடுத்தியிருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

என்றாலும் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் - குறிப்பாகக் கடலிலும் கூட - புலிகளையும் அரச தரப்பினரையும் தவிர வேறு ஆயுதக்குழுக்கள் இயங்குகின்றன என்ற சந்தேகம் தோன்றும் நிலைமை ஏற்பட்டிருப்பது கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது போல ஆபத்து நிறைந்ததாகும்.

இத்தகைய குழுக்களின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படுவது சமாதான முயற்சிகளுக்கு ஆபத்துத் தருவதுடன் மட்டும் அமைந்துவிடாது, இனச்சிக்கலை மேலும் மோசமடைய வைத்து, அமைதித் தீர்வுக்கு எதிர்காலத்தில் வழியே இல்லை என்ற புதிய பரிமாணத்துக்கு இனச்சிக்கலை திசை திருப்பவும் வைத்துவிடும்.

எனவே, அரசும் புலிகளும் உஷாரடைந்து - இணைந்து செயற்பட்டு - விரைந்து 'தீர்த்து' வைக்க வேண்டிய விவகாரம் இது எனவும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

---

ஆதாரங்கள் இல்லாததால்

# சீனக்கப்பலை விடுதலைப் புலிகள் தாக்கியதாகக் கூறமுடியாது!

## கண்காணிப்புக் குழு அறிக்கை

முல்லைத்தீவுக் கடலுக்கு அப்பால் சீன மீன்பிடிக்கப்பல் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை விடுதலைப் புலிகள்தான் நடத்தினார்கள் என்பதற்கு தீர்க்கமான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று கண்காணிப்புக்குழு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக கண்காணிப்புகுழு அதிகாரியான தீதோர் தோல்கிஷன் பி.பி.ஸிக்கு கருத்துக் கூறும்போது தெரிவித்ததாவது :-

சீனக் கப்பல் மீதான தாக்குதல் சம்பவத்துக்கு அரசோ அல்லது விடுதலைப் புலிகளோ காரணம் என்று கூற முடியாது. கிடைத்த ஆதாரங்கள் தீர்க்கமான வகையில் இருக்கவில்லை.

அந்தக் கடற்பகுதியில் புலிகள் மற்றும் அரசு அல்லாத வேறு ஏதேனும் ஆயுதக்குழு இதனைச் செய்திருக்கலாம்.

எப்படியாயினும் இது அமைதி வழிமுறைக்கு மிகவும் ஆபத்தான ஒன்றாகும். (ஒ-4)

---

# நாட்டு நடப்பு

## நவீன ஆத்திசூடி

கத்தி ஏந்திய கள்வன் கழலினை
வீழ்ந்து வீழ்ந்து வணங்குவம் யாமே!

அடித்து பறித் துண்
ஆவினைக் கொன்று தின்
இழி செயல் விரும்பு
ஈனர்க்கு உதவிடு
உண்டி பெருக்கிடு
ஊருடன் பகைத்து வாழ்
எடுத்திடு கத்தியை
ஏற்றிடு கொடுமையை
ஒழித்திடு பக்தியை
ஓடிக் கற்பழி
ஔவியம் பேசு
எஃகென நெஞ்சை வை.

- விகடகவி.

---

வீடுகள், விவசாய நிலங்களிலிருந்து

# படையினரை வெளியேற்றக்கோரி மந்துவில் மக்களும் மறியற்போரில்

## புத்தாண்டுக்குப் பின் போராட்டம் என அறிவிப்பு

தென்மராட்சி,மார்ச்30

மந்துவில் பகுதியில் உள்ள நான்கு வீடுகள் மற்றும் விவசாய நிலங்களில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வெளியேறறக்கோரி மறியற்போராட்டத்தில் ஈடுபட அப்பகுதி மக்கள் முஸ்தீபு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரும்பாலும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக இந்த மறியற்போராட்டம் இடம்பெறலாம் எனக் கூறப்பட்டது.

மீசாலை, புத்தூர்ச் சந்தியிலிருந்து வேம்பிராய் சந்தி வரையிலான வீதியில் உள்ள முப்பதுக்கு மேற்பட்ட வீடுகளில் படையினர் தங்கியிருந்த வேளையில், வேம்பிராய் - வரணி வீதியில் ஞானம் கடைச் சந்தியில் உள்ள நான்கு வீடுகளும் விவசாய நிலங்களும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

இதனால் இவ்வீதியிலிருந்து மந்துவில் சந்திக்கு செல்லும் நந்திவளை ஒழுங்கை பொதுமக்களின் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டது. எனவே, இந்த ஒழுங்கையில் வசிக்கும் 100இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வேறு வீதியூடாக தமது வீடுகளுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

புத்தூர்ச் சந்தி - வேம்பிராய் வீதியில் உள்ள வீடுகளில் தங்கியிருந்த படையினர் அங்கிருந்து வெளியேறி மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. எனினும், இந்த முகாமிலிருந்து படையினர் வெளியேறாமல் தொடர்ந்தும் முகாமைப் பலப்படுத்தி வருகின்றனர் என்று இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், இந்த குடியிருப்புகளில் உள்ள படையினரை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வெளியேற்றித் தமது வீடுகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் -

தவறின் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சித்திரைப் புத்தாண்டின் பின்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், புனர்வாழ்வு அமைச்சர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்புக் குழுத் தலைவர், யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர், 52ஆவது படையணியின் பிரிகேடியர் ஆகியோருக்கும் விடுதலைப் புலிகளின் தென்மராட்சி அரசியல் பிரிவு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-117-31)

---

# விடுதலைப் போருக்கு திரைமறைவில் சதி: சங்கரி எம்.பியும் இதற்கு உடந்தையா?

## கேள்வி எழுப்புகின்றார் தேவதாசன்

யாழ்ப்பாணம்,மார்ச்30

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குச் சவால் விடும் வகையில் திரைமறைவில் பெருமெடுப்பில் சதித்திட்டம் தீட்டப்படுகிறது.

இத்தகைய சதித்திட்டத்தின் ஆரம்பமாகவே 'தமிழ்த் தேசியத்தின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்க முடியாது' என்ற ஆனந்தசங்கரி எம்.பி.யின் கூற்றைக் கருத வேண்டியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட க.தேவதாசன் (முதன்மை வேட்பாளர்).

'ஆனந்தசங்கரிக்கு ஏன் இந்த அவசரம்?' என்ற தலைப்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியத்தின் ஏகபிரதிநிதிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொள்ளமுடியாது என்று தமது புதிய அரசியல் கண்டுபிடிப்பொன்றை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி இன்று பகிரங்கப்படுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்த் தேசியத்தின் ஏக பிரதிநிதிகள் என்று கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரகடனம் செய்திருந்ததும் -

அதற்கான அங்கீகாரத்தைத் தமிழ்த் தேசியம் ஜனநாயக வழிமுறையினூடாக மிகத் திருத்தமாக வெளிப்படுத்தியிருந்ததும் - உலகறிந்த உண்மை.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயகத் தேர்தலில், அதிக வாக்குகளைப் பெறும் கட்சியினரேதான் மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சியதிகாரத்தைக் கையேற்கிறார்கள். இச் சிறு உண்மை பெரும் மூளைசாலியெனத் தனக்குத்தானே தம்பட்டம் அடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரிக்கு இன்று புரியாமல் போனது ஏன்? அல்லது புரிந்தும் புரியாதவர் போல அறிக்கை விடுகிறாரா? அவ்வாறாயின், ஆனந்தசங்கரிக்கு ஏன் இந்த அவசரம்?

ஈ.பி.டி.பியையும், புளொட்டையும், யு.என்.பியையும் தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாகப் பிரகடனப்படுத்தும் தேவை இன்று இவருக்கு ஏன் எழுந்தது? இதன் பின்னாலுள்ள மர்மம் என்ன? இவரது அறிக்கை, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்குச் சவால்விடும் வகையில் திரைமறைவில் திட்டமிடப்பட்டுவரும் மாபெரும் சதி ஒன்றின் ஆரம்பம் என்றே கருதவேண்டியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் நான் ஐக்கிய சோஷலிசக் கட்சி சார்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு இருந்தாலும் தமிழ்த் தேசியத்தின் பொது ஓட்டத்துக்கு குறுக்கே நிற்க விரும்பாமல் ஒதுங்கியிருந்தேன்.

ஆனாலும், அவ்வேளை ஆனந்தசங்கரி போன்றவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை ஊடகவியலாளர் சந்திப்பொன்றினூடாக அம்பலப்படுத்தியிருந்தேன். மக்கள் விரோதம், இனத் துரோகம் என்பவற்றைத் தமிழ்த் தேசியம் இனங்கண்டுகொள்ள வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம் இன்று உருவாகியுள்ளது என்பதை எச்சரிக்கையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்று அதில் உள்ளது. (எ)

---

# யாழ்.விஞ்ஞான சங்கத்தின் பதக்கம் இம்முறை கொழும்பு பேராசிரியருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் வருடாந்தம் நடத்தும் ஆண்டமர்வு எதிர்வரும் ஏப்ரல் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் காலை 8.30மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. குறிப்பாக இந்நிகழ்வுகள் பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்திலும், பௌதிக விரிவுரை மண்டபத்திலும், கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளன. இந்த ஆண்டு அமர்வுக்கு பிரதம விருந்தினராக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உயிரியல் இரசாயனத்துறைத் தலைவரும் பேராசிரியருமான ஜான்ஸ் வருகை தரவுள்ளார்.

முதலாம் நாள் நிகழ்வுகள் நான்கு அமர்வுகளைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் முன்னாள் இந்துக் கல்லூரி அதிபரும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தலைவருமான அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும். தலைமை உரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரான ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகப் பேராசிரியர் ஈ.ஆர். ஜான்ஸ் உரையாற்றுவார். வருடாந்தம் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் வழங்கப்படும் 'பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப் பதக்கம்' இம்முறை பிரதம விருந்தினரான ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஈ.ஆர். ஜான்ஸ் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

'பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப் பதக்க' உரையை பேராசிரியர் ஈ.ஆர்.ஜான்ஸ் நிகழ்த்துவார்.

'தாவரங்கள், மனித குலத்திற்கு கடவுளின் கொடையாகும்' எனும் பொருள் பற்றியதாக இவ்வுரை அமையும். இது மரவள்ளி, பனை ஆகியவற்றை அடிநிலையாகக் கொண்டமைந்த ஆய்வாகும். (ஐ)

---

## நாளை

பங்குனி 17
திங்கட்கிழமை
(31.03.2003)
திதி: சதுர்த்தசி
முற்பகல் 11.50 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
முன்னிரவு 9.00 வரை.
சுபநேரம் : 12.12 - 1.42
ராகுகாலம் : 7.42 - 9.11
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

பலவான் அனைவரும் பெரியார் அல்லர்; பலத்தை நல்ல வழிக்கு பயன்படுத்துவதில் தான் மேன்மை உள்ளது.

# வேலையாள்கள் தேவை

- விற்பனையாளர்கள்.
- வாகனத்தில் சென்று பொருள்கள் விற்பனை செய்வதற்கு விற்பனைப்பிரதிநிதி, உதவியாளர்.
- ஸ்கிறீன் பிறின்ரிங் செய்வதற்கு நன்கு வேலை தெரிந்தவர் (இருவர்).

திறமையும் ஆர்வமும் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

நல்ல சம்பளமும், சலுகைகளும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
ஆசீர் வணிக நிலையம்
202A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2222842, (16055)


# 31ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 | 27 |
| 09 | 02 |
| 1932 | 2003 |

## திருமதி தனபாலசிங்கம் தனலஷ்மி(கண்மணி)

திருமதி தனபாலசிங்கம் தனலஷ்மி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து தந்தி, தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து மலரஞ்சலி செலுத்தி துயர் பகிர்ந்தவர்களுக்கும், அனைத்து உதவிகள் செய்து ஆறுதல் அளித்த உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் குடும்பத்தவர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி 30.03.2003 ஞாயிற்றுக்கிழமை (இன்று) நடைபெறும். அத்தருணம் எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

27, 32ஆம் ஒழுங்கை,
வெள்ளவத்தை

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
கணவன், பிள்ளைகள், மருமகன்

# மரண அறிவித்தல்கள்

## முத்தையா சாம்பசிவம்

மாதனை, பருத்தித்துறையைச் சேர்ந்த முத்தையா செல்லமுத்துவின் மூத்த மகன் சாம்பசிவம் (சங்கீத ஆசிரியர்,கலைஞானகேசரி) அவர்கள் நேற்றுமுன்தினம் (28-03-2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிவமூர்த்தி (பிரான்ஸ்), தனேஸ்வரி, ஞானேஸ்வரி, குகமூர்த்தி (ஜேர்மனி), அமரர் அச்சுதமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணம் (ஆசிரியை), சச்சிதானந்தம் (பிரான்ஸ்), யோகராசா ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசிங்கம் (கொழும்பு), இராஜசேகரம் (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல்2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோரியடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு.இராஜசேகரம்
(சகோதரன்).

மாதனை,
பருத்தித்துறை. (16092)

## வயித்திலிங்கம் வல்லிபுரம்

நீர்வேலியைச்சேர்ந்த வயித்திலிங்கம் வல்லிபுரம் 26.03.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற அப்புக்குட்டி - சின்னாச்சி தம்பதிகளின் மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் அமரர் கந்தசாமி, சரஸ்வதி, கணபதிப்பிள்ளை (மல்லாவி), பாலசிங்கம் (சுவிஸ்), தம்பிஐயா (இத்தாலி), பூபதி (சுவிஸ்), அமரர் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினிதேவி, கனகலிங்கம், அழகரெத்தினம் (மல்லாவி), கௌசலாதேவி (சுவிஸ்), புஸ்பராணி (இத்தாலி), பரராஜசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் கந்தையா, அமரர் கதிரவேலு, தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வே.கனகலிங்கம்
(மருமகன்)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (16101)

# அறைக்குள் அதிபரை பூட்டிய மாணவர்கள்!

நக்வானை,மார்ச்30

நக்வானைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் அந்தப் பாடசாலை அதிபரையும், மாணவர் ஒருவரையும் பல மணித்தியாலங்கள் அறை ஒன்றினுள் பூட்டி வைத்துள்ளனர். அவர்களை பின்னர் நக்வானைப் பொலிஸார் வந்து மீட்டனர்.

இப்பாடசாலையில் சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன. அந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர் ஒருவரே அந்தப் பொருள்களைக் களவாடியதாக நம்பப்பட்டது. கடந்த வாரம் குறித்த அந்த மாணவரை பாடசாலை அறை ஒன்றுக்குள் பூட்டி வைக்க ஏனைய மாணவர்கள் முயற்சித்தனர். அவ்வேளை அப் பாடசாலை அதிபர் தலையிட்டு அந்த மாணவனை விடுவிக்க முற்பட்டார். களவாடிய மாணவனை அதிபர் காப்பாற்ற முயன்றதை அடுத்து ஏனைய மாணவர்கள் அதிபரையும் அந்த அறைக்குள் வைத்துப் பூட்டினர். இதனையடுத்தே பொலிஸார் அதிபரையும் மாணவரையும் மீட்டனர். (ஒ)

# வீடமைப்பு அபிவிருத்தி கடனுதவி

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். மாவட்டத்தில் வீடமைப்பு அபிவிருத்திக்கென இந்த ஆண்டில் இதுவரையும் 25 லட்சம் ரூபா பொது மக்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

இக்கடன் பணத்தைப் பெற்றவர்கள் பத்து வருடங்களுக்குள் தவணை அடிப்படையில் அதனை மீளச்செலுத்த வேண்டும்.

இதன்படி ஒருவருக்கு ஆகக்கூடுதலாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் -

அதற்கு முன்னர் வீடமைப்புத் தொடர்பான விவரங்கள் யாவும் ஆராயப்பட்ட பின்பே பணம் பகுதியாக வழங்கப்படும் எனவும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடன்பெற விரும்புவோர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# வாகனவரி செலுத்துவோருக்கு!

தென்மராட்சி,மார்ச்30

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வாகனங்களுக்கான வரிகள் பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை வரை தண்டப் பணமின்றி செலுத்தலாமெனவும் - வாகனவரி செலுத்தாதவர்களிடமிருந்து நாளை மறுதினம் தொடக்கம் தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 28 |
| 04 | 02 |
| 1953 | 2003 |

## அமரர் தவமணி குணரத்தினம்

உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வால் எம்மோடு வாழும் இதயத் தெய்வமே!
நீர் பிரிந்து முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
உம் நினைவலைகள் என்றும் ஆறாது!

சஞ்சடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (16090)

உம் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 | 01 |
| 03 | 04 |
| 1939 | 2002 |

## அமரர் தாமோதரம்பிள்ளை ஜெயசிங்கம்

(திருநெல்வேலி)

*(Plant Manager Asbestos Cement Industries Ltd. Ratmalana.)*

திதி: 21.03.2003

ஆண்டு ஒன்று ஆயிற்றே அப்பா எமைப்பிரிந்து
எங்கு சென்றீர்கள் நித்தமும் உங்கள் நினைவால்
ஏங்கித் தவிக்கின்றோம் என்றென்றும் ஆறாது எங்கள் துயர்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்தெம்மை வாழ வைத்தீர்
அடுத்தவர்க்கு உதவுவதே நோக்கமாகக் கொண்டிருந்தீர்
கடமை, கண்ணியம் ,கட்டுப்பாட்டை செவ்வனே கடைப்பிடித்தீர்
பணிபுரியும் போதே உயிர் நீத்தீர், பெருமை பல சேர்த்தீர்
செயல் வீரனாய் வாழ்ந்து காட்டிய தெய்வம் நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்!

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(16099)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



(புங்குடுதீவு - 8ஆம் வட்டாரம்)

அமரர்

## இரத்தினராசா தேவராசா

(தேவன்)

(ஸ்தாபகர், சோபனா புடைவையகம்)

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05~08~1958 | 12~04~2002 |

திதி: 01.04.2003

எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றிவைத்த அன்புத் தெய்வத்தை நினைவு கூருவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளைமறுதினம் (01.04.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.98, றெயில்வே றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (16073)

மனைவி, பிள்ளைகள்
(புதிய சோபனா ஆடையகம் -
யாழ்ப்பாணம்).

# காரைநகர் மணற்காடு
# கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில்
## 12ஆம் திருவிழா உபயகாரர்கள் ஆதரவில்
# திருக்குள பிரதிஷ்டை சிறப்பு மலர்
## 30-03-2003

## "கும்பாமிர்தபுஷ்கரிணி" தீர்த்த தடாக பிரதிஷ்டை

*"கங்கா கங்கா இதியொ புருயாத்*
*போஜ் நாநாம் சனதரபி*
*முச்யதே சர்வ பாபேப்ய:*
*விஷ்னு லோகம் ச கச்சதி"*

கங்கா! கங்கா! என்று எவன் ஜபிக்கிறானோ அவன் கங்கை இருக்கும் இடத்திலிருந்து பலயோசனை தூரத்திற்கு அப்பால் இருந்து ஜபித்தாலும், எல்லாப் பாவங்களில் இருந்தும் நீங்கி விஷ்னு லோகத்தையடைவான் என்பது ஆகம நிருபணம்.

இன்று இந்த தடாகத்திலே கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, காமரபர்ணி முதலிய புண்ணிய நதிகளின் அதி தேவதைகள் ஆவாஹனம் செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுகிறார்கள். கும்பநாயகியின் திருவருளாலும் பிரதான சிவாசாரியாருடைய ஆசியினாலும் அம்பிகை அடியார்களின் பெருமுயற்சியினாலும் நிறைவேறி இருக்கின்ற இத்திருப்பணியால் புனித தீர்த்த புரோகஷணம் பெற்று எல்லோரும் இஷ்ட சித்திகளைப் பெறுவார்களாக!


சிவாகமஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்
காயத்திரி பீடம்,
இனுவில்.

## மணற்காட்டு மாரியம்மன் கேணிப் பிரதிஷ்டை ஆசியுரை

ஆலயங்கள் அந்த ஆலயங்களுக்குரிய திருமஞ்சனக் கிணறு, திருக்குளம் அமைக்கப்படலாம். ஆனால், பராமரிப்பில் பல ஆலயங்கள் கவனிப்பாரற்றும் அழியும் நிலையிலும் காணப்படுகின்றன. இந் நிலையில, எங்கள் கும்பநாயகி முத்துமாரியம்பாளின் திருக்குளமானது பன்நெடுங்காலம் பழைமை வாய்ந்தது. மூதாதையரால் நிர்மாணிக்கப்பட்ட இந்தத் திருக்குளத்தினை புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று உயரிய எண்ணங்கொண்டு திருப்பணி புரிந்து நிறைவேற்றியிருக்கின் றார்கள்.

ஆலயத்தின் மஹோற்சவங்கள் வரிசையில் மிருகயாத்திரைத் திருவிழாவை செய்துவருகின்ற உபயகாரர்கள் இந்த புனிதப் பணியை - தங்கள் அன்பான திருப்பணியை - திருக்குளமாக அன்னைக்கு செய்திருக்கிறார்கள். இவ்வாண்டு அம்பாள் இந்த திருக்குளத்திலே அருள்பாலிக்கவுள்ளாள். இந்த திருக்குளத்தினை அழகுற அமைத்த அனைவருக்கும் அம்பாளின் திருவருள் பெருகவேண்டும் என வேண்டி ஆசியுரைக்கின்றேன்.

சுபம்
பிரம்மஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள்
ஆலய பிரதம குரு,
மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயம்,
காரைநகர்.



## அண்டினோர்க்கு வாழ்வளித்து அருள்பாலிக்கும் அன்னை மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள்

ஈழமணித் திருநாட்டின் வடபால் மேற்குத் திசையில் உள்ளது காரைநகர் என்னும் வளம்மிக்க சிறந்த தீவு. இப்பிரதேசத்தில் உள்ள மணற்காடு என்னும் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் கும்பநாயகி முத்துமாரி அம்பாள் அண்டினோர்க்கு வாழ்வளித்தும் அருள் பாலிக்கும் அன்னை ஆகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஆலயத்தில் இற்றைக்கு சுமார் 300 ஆண்டுகள் பழைமைவாய்ந்த திருக்குளம் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும். இந்த திருக்குளம மூதாதையரினால் கட்டப்பட்டு இன்று வரை அவர்களின் வழித் தோன்றல்களினால் பராமரிக்கப்பட்டு வந்ததுமாகும்.

இத்திருக்குளம் காலக்கோளாறினால் சேதமடைந்து இடிந்து விழும் நிலையில் காணப்பட்டது. இதனைக் கண்ணுற்ற 12ஆம் திருவிழா உபயகாரர்களின் பெரு முயற்சியினால் இத்திருக்குளம் அழகிய வனப்புடன் புனரமைக்கப்பட்டு இன்று பிரதிஸ்டை செய்யப்படுகின்றது. 12ஆம் திருவிழா உபயகாரர்கள் இத்திருக்குளத்தின் புனரமைப்புக்கு தமது உபயகாரார்களிடமிருந்து உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் 10 லட்சத்துக்கும் மேலான நிதியைச் சேகரித்து திருக்குளத்தின் கட்டட வேலைகளை அழகுற நிறைவேற்றியுள்ளனர்.

இத்திருக்குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கு நிதியுதவி வழங்கிய 12ஆம் திருவிழா உபயகாரர்களுக்கு அம்பாளின் அருள் ஆசி என்றும் கிடைக்கும்.

திருக்குளத்தில் காணப்பட்ட மிகப் பெரிய கற்களை அப்புறப்படுத்தி வெள்ளைக்கற்களால் மிக அழகாக வடிவமைத்த கட்டடக் கலைஞர்களுக்கும் திருக்குளத்தின் சுற்றுப்புறத்தை சிரமதானத்தின்மூலம் துப்புரவுப் பணிகளை மேற்கொண்ட 12ஆம் திருவிழா உபயகாரர்களுக்கும் கும்பநாயகி முத்துமாரி அம்பாள் என்றும் அருள்பாலிப்பாள் என்பதில் ஐயம் இல்லை.

## இந்து கலாசார அமைச்சரின் ஆசிச்செய்தி

இலங்கையின் வடபால் அமைந்த எழில்மிகு யாழ்ப்பாண தீவகற்பத்தைச் சூழ்ந்த சப்த தீவுகளில் ஒன்றும் பல புண்ணிய சைவ திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டுவிளங்கும் தர்மநெறியில் உண்மைச் சமய வாழ்வினைக் கைக்கொண்டு இறைவழிபாடாற்றிவருகின்ற சைவப்பண்பாடு மிக்க மக்கள் வாழும் பிரதேசமாக விளங்குகின்ற காரைநகரில் மணற்காடு முத்துமாரியம்பாள் ஆலயத்தின் புனித தீர்த்தக்கேணி அழகான முறையில் புனரமைக்கப்பட்டு அதனையொட்டி இச்சிறப்பு மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்றதே ஆலயம் ஆகும். அதேபோல், இவ்வாலயத்திலும் ஆலயத்தின் அழகுக்கேற்ப ஆகம விதிப்படி இத்திருக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் பன்னிரண்டாம் திருவிழா உபயகாரர்களின் பெரு நிதிப் பங்களிப்புடன் வெகுசிறப்பாகப் புனரமைத்துள்ளனர். திருக்குளத்தின் அருகில் அமைந்துள்ள ஐம்பது அடி உயரமான தேர்த்தரிப்பிடத்தின் அழகான - பிரமாண்டமான - தோற்றத்திற்கு உறுதி சேர்க்கும்வகையில் இத்திருக்குளம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அடியார்களின் தாராள நிதி அன்பளிப்பும் அம்பாளின் அருட்கடாட்சமுமே காரணமாகும்.

இன்றைய நாளில் வெளிவரும் இச்சிறப்பு மலர் சிறப்பாக வெளிவர ஆசிகூறுவதோடு, அனைத்து அடியார்களிற்கும் அம்பாளின் அருளாட்சி கிடைக்கவேண்டும் என மணற்காட்டு முத்துமாரயம்மனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

*"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

தி.மகேஸ்வரன்
இந்து கலாசார அமைச்சர்.
இலங்கை.

## பெறுநர் போற்றுகின்றார்

சைவாலயங்கள் அனைத்திற்கும் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவை இன்றியமையாத முப்பெரும் அம்சங்களாவன என்பதை அனைவரும் அறிவர். அவ்வகையில் காரைநகர் மணற்காடு கும்பநாயகி அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள திருக்கேணி இற்றைவரை அவ்வாலயத்தின் தீர்த்தத் தேவையை நிறைவாகப் பூர்த்திசெய்து வந்துள்ளது.

இத் திருக்குளம் நல்கும் அரும்பணியை நன்குணர்ந்த 12ஆம் திருவிழா உபயகாரர் சபையினர் அதனைப் புனரமைத்து மெருகூட்டிப் பேணிப் பாதுகாக்க நண்ணினர். அம்மையின் திருவருளால் குறித்த சபையினர் மேற்கொண்ட திருக்குளப் புனரமைப்புத் திருத்தொண்டு செவ்வனே பூர்த்தியாகியுள்ளது.

புனரமைக்கப்பட்டுப் புதுப் பொலிவுடன் திகழும் இத்திருக்குளம் மீண்டும இவ்வாலயத்திற்கு இந்நாள் முதல் தீர்த்தத் திருப்பணி புரியவுள்ளமை கண்டு இறும்பூதெய்தாதவரெவருமிலர். இச் சீரிய திருத்தொண்டை யாவரும் வியக்க நிறைவேற்றியுள்ளனர். 12ஆம் திருவிழா உபயகாரர் சபையினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு கும்பநாயகியின் அருளாசி நிரம்பக் கிடைப்பதாக. இத்திருக்கேணியின் பெரும் பயனைச் சிறப்பாக காரைநகர்வாழ் சைவப் பெருமக்களும், பொதுவாக ஏனைய பகுதிச் சைவ சமயிகளும் பெற்றுய்வார்களாக. அன்னையின் அருள் அனைவருக்கும் அபரிமிதமாகக் கிடைக்க அவ்வம்மையை இவ்வாலயத திருப்பணிச் சபையின் சார்பால் வழுத்தி அமைகின்றேன்.

வே.நடராசா
பெறுநர்.

## திருக்குள பிரதிஷ்டை ஆசியுரை

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற முதுமொழியை நினைக்கும்போது கோயில் முக்கியமானது என்பதும் வழிபாடு இன்றியமையாதது என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. எமது மணற்காடு கும்பநாயகி அம்பாள தம்மை வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி நல்லருள் புரியும் நாயகியாக விளங்குகின்றாள். அம்பாளின் திருக்குள பிரதிஷ்டை இன்று நடைபெறுவதையிட்டு ஆனந்தம் அடைகின்றேன்.

எமது உபயகாரர்களின் விடாமுயற்சியினாலும் அம்மையின் அருளினாலும் திருக்குளம் புனரமைப்பு நிறைவுபெற்றுள்ளது. புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் திருக்குளம் இவ்வாலயத்திற்கு இன்று தொடக்கம் தீர்த்தத் திருப்பணியை நிறைவேற்றுவதையிட்டு எமது உபயகாரர்கள் பூரிப்பும் அடைகின்றனர். அம்மன் அடியார்களுக்கு சகல செல்வங்களும் கிடைக்கவேண்டுமென்று அம்பாளின் பாதாரவிந்தங்களை அடி பணிகின்றேன்.

தலைவர்,
ஆ.மகாலிங்கம்
சமாதான நீதிவான்,
12ஆம் திருவிழா உபயகாரர் சபை,
மணற்காடு, காரைநகர்.


## அன்னையின் அருள் வேண்டித் துதிப்போர்:

**கனகா வீடியோ அன் போட்டோ**
பிரதான வீதி, ஆலடி, காரைநகர்.
கிளை: பிரதான வீதி, வலந்தலை, காரைநகர்.

**எழிலகம் பல்பொருள் வாணிபம்**
பிரதான வீதி, ஆலடி, காரைநகர்.

**துரை மலரி ஸ்பொட் அன் கேமா தொலைத் தொடர்பகம்**
டச்சு வீதி, சித்தன்கேணி.

**அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
வெடியரசன் வீதி, காரைநகர்.

**ஆ.மகாலிங்கம்**
சமாதான நீதிவான்,
வெடியரசன் வீதி, காரைநகர்.

**காரை. மத்தி மின் ஒட்டுத் தொழிலகம்**
வீக்காவில், காரைநகர்.

**கற்பகம் பிள்ளையார் கட்டடப் பொருள்கள் ஒப்பந்தசேவை**
வட்டு.வடக்கு, சித்தன்கேணி.

## ACADEMY OF FUNAKOSH MARTIAL ARTS SHOTOKAN - SRILANKA



WE Here by Congratulated
Mas. **S.Sivatharsan** and
Mas. **B.Kartheepan** Who were graded by
Sensei **V.S. Mahendiran** and graded

***Black belt on 2nd March 2003***

**S.SIVATHARSAN**
(Black Belt 1st Dan)

Master Incharge:
Sinsei **S.K.VIJAYABALA**
(Black Belt 2nd Dan)

Chief Examiner:
Sinsei **V.S.MAHENDIRAN**
(Black Belt 4th Dan)

Instructor:
Sinsei **J.ROBIN**
(Black Belt 1st Dan)

**B.KARTHEEPAN**
(Black Belt 1st Dan)

**- STUDENTS.**

(16093)


## 16ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1949 - 05 - 07



விண்ணில் 1987 - 03 - 30

அமரர்

### சின்னத்துரை ஜோர்ஜ் நவரெட்ணம்

ஆண்டுகள் பல எம்முடன் வாழ்ந்து
ஆசையுடன் எமை அரவணைத்து
பாசமுடன் வாழ்ந்த தெய்வம்
நீ மண்ணுக்குள் சென்றாலும்
கண்ணுக்குள் வாழ்கிறாய்!

*உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!*

என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி: லலிதா
பிள்ளைகள்: சாந்தி, சங்கர், சதீஸ (நீர்கொழும்பு),
சந்திரன், சாந்தகுமார (லண்டன்),
ரஞ்சித்குமார் (யாழ்ப்பாணம்),
நோபேட (மச்சான்-பாரிஸ்),
எல்மோ (மருமகன்-லண்டன்),
மருமக்கள், பேரப்பிள்ளைகள் (நீர்கொழும்பு)
மற்றும் உற்றார், உறவினர்.

23/2,ராணி மாவத்தை,
ரத்துக்காளை, நீர்கொழும்பு.
14/2.இராசாவின்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(16054)

## மாலை நேர வகுப்பு கைதடியில் ஆரம்பம்

கைதடி மத்தியில் வசிக்கும் வறிய மாணவர்கள் மத்தியில் கல்வியறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் இலவசமாக மாலை நேர வகுப்புக்களை நடத்திவருகின்றனர்.(எ-75)

## வாழும் கலை பயிற்சி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவிருக்கும் 'வாழும் கலைப் பயிற்சி' நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக உதவிப் பிரதேச செயலர் க.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-100)

## வீடமைப்புத் திட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை

யாழ்ப்பாணம்,மார்ச்30

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள 298 வீடுகளும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கே விற்பனை செய்யப்படும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

அங்குள்ள வீடுகளை விற்பனை செய்வதற்கு அதிகார சபையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதன்படி 298 வீடுகளுக்கும் 950 விண்ணப்பப்படிவங்கள் பொதுமக்களால் பணம் செலுத்திப் பெறப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்து மீளவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்களில் இருந்து தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. அந்தக் குழுவே விணணப்பங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்து தகுயானவர்களைத் தெரிவு செய்யும் அதன்பின்னரே வீடுகள் விற்பனை செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)


## ஒப்பறேற்ரர் தேவை

அச்சுவேலியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தியேட்டருக்கு ஒப்பறேற்ரர் (Operator) தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும்.

தொடர்பு: **லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
T.P. : 070-212223

(16037)



## ஜோ - எகட்டனின்

புதிய அறிமுகம்---- யாழ்நகரில்!
"மொகுல் புரியாணி"
சிக்கன் மசாலாவுடன்
விலை ரூபா 150/- மட்டுமே!
பார்சல் ஒன்றுக்கு ஒரு
பொக்கட் கலண்டர்.
விரையுங்கள்... மனைக்கு
வெளியே ஒருமனை...
ஜெசித்தாரா
உங்கள் உணவகம்
வழமையான உணவுப் பொதிகள்
வழமைபோல.
எங்கள் தொலைபேசி இல. :
071-399166, 0777 032188
*19/3, மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,*
*சண்டிக்குளி.*

(சி-27020)



## எக்ஸ்போ ஏவியேஷன்

இல. 1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 3891
071 348888, 071 349999, 0777 730666

| *காலைநேர விமானசேவை* | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள். செவ்வாய். புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |
| *மாலைநேர விமானசேவை* | | | | |
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி. சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு :- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

★★ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து
யாழ - பலாலி - யாழ்
இரத்மலானை - கொட்டாஞ்சேனை - இரத்மலானை

★★ வெளிநாட்டு பிரஜைகளுக்கும், உள்நாட்டு பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.
ஒருவழி - 2,425/-
இருவழி - 4,550/-

(சி-27033)


## யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தால் நடத்தப்படும் நன்றி செலுத்தும் வழிபாடு

தந்தை
எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் வாழ்வின்
**105ஆவது பிறந்ததின நினைவு கூரல் வழிபாடு**

இடம்: சென்.ஜோன்ஸ் ஆலயம், சுண்டிக்குளி.
காலம்: 2003.03.31 திங்கட்கிழமை
மாலை 4.00மணி (S.L.T.)
நினைவுரை: திரு.சி.வி.கே.சிவஞானம்
இறை செய்தி: அருட்தந்தை மைக்கல் சௌந்தரநாயகம்
(யாழ். மறைக்கோட்ட முதல்வர்)

*யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

செயலாளர்,
யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.

(16021)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
### சின்னத்துரை பாறுவதி

தாயின் மடியில் 10.02.1937 | தாயக மண்ணில் 28.02.2003

சிங்கநகர், வல்லிபுரக் குறிச்சியை பிறப்பிடமாகவும் நாகர்கோயில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாறுவதி அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது துயரினைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை தவசிகுளம், மிருசுவிலில் அன்னாரின் மருமகன் தவகுலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
செ.தர்மகுலசிங்கம் (மருமகன்),
சின்னத்துரை (கணவர்)

*தவசிகுளம்,*
*மிருசுவில்.*

(16094)

## துயர் பகிர்கிறோம்



27.03.2003 அன்று காலமான

### நீக்கிலாஸ் அந்தோனிப்பிள்ளை (றொபேட்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் ....

- உறவினர்கள்.

(16114)

## மரண அறிவித்தல்

### நீக்கிலாஸ் அந்தோனிப்பிள்ளை

(றொபேட்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட N.அந்தோனிப்பிள்ளை (றொபேட்) 27.03.2003 அன்று காலமானார்.

அன்னார் நீக்கிலாப்பிள்ளை - திவியம் ஆகியோரின் அன்பு மகனும் திருமதி A.அக்னெஸ் - இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜோசேப்பு, பிரான்சிஸ் மற்றும் குஞ்சுமணி, செல்வதேசம், எலிசபெத் தங்கம்மா, திரேசம்மா, றோஸ்மேரி (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் லெஸ்லிராஜன் (அமெரிக்கா), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்) மற்றும் ஜெயசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெபக்கலா, பூமிற்பாமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தி, நர்மதா மற்றும் றஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மிக்கல்ராஜா (கரவெட்டி) மற்றும் சூசைமலர் (கரவெட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிமல்ராஜ், விஜியராஜ் மற்றும் அனிற்றா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்கு ஊர்காவற்றுறையில் நடைபெறும் (திகதி பின்னர் அறிவிக்கப்படும்).

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.
திருமதி.N.அக்கினஸ் இராசம்மா (மனைவி),
பிள்ளைகளும்
கரம்பன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

*66,அலெக்ஸ் வீதி,*
*நீர்கொழும்பு.*
T.P:0777-038973,
0777-888848

(16113)

## தெற்கிலிருந்து உருளைக்கிழங்கு

தென்மராட்சி,மார்ச்30

தென்னிலங்கையிலிருந்து உருளைக்கிழங்கு மீண்டும் குடாநாட்டு சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது.

இங்கு உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்ட வேளையில் தென்னிலங்கையிலிருந்து உருளைக்கிழங்கு கொண்டுவருவது தடைசெய்யப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை முடியும் தறுவாயில் உள்ளதால் கொழும்பிலிருந்து உருளைக்கிழங்கு வாகனங்களில் கொண்டுவரப்படுகிறது.

தற்போது யாழ்ப்பாண உருளைக்கிழங்கு கிலோ நூறு ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது. தென்னிலங்கையிலிருந்து உருளைக்கிழங்கு வரத் தொடங்கியுள்ளதால் விலையில் வீழ்ச்சி ஏற்படலாமென கூறப்படுகிறது.

(ஓ-117)

## பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்30

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பொங்கல் விழாவினை முன்னிட்டு காரைநகரில் இருந்து விசேட பஸ்சேவையினை வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி மற்றும் அடுத்தமாதம் 7ஆம் திகதி இடம்பெறும் பொங்கல் விழாவுக்கு அடியவர்கள் சென்றுவர வசதியாக இந்த சேவை இடம்பெறுகின்றது.

காரைநகரில் இருந்து காலை 6.30 மணிக்கும் 7.15 மணிக்கும் இரு பஸ்கள் புறப்பட்டு அம்மன் கோயிலைச் சென்றடையவுள்ளன.

முதலில் புறப்படும் பஸ் காரைநகர், மூளாய், சித்தன்கேணி மானிப்பாய், மருதனார்மடம், சுன்னாகம், புத்தூர் ஊடாகவும் -

அடுத்த பஸ் மூளாய், சுழிபுரம், சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, தொட்டிலடி, மாசியப்பிட்டி, கந்தரோடை, சுன்னாகம், புத்தூர் வழியாகவும் - செல்லவுள்ளன.

(ஓ-12)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 07 - 1929 | 22 - 03 - 2001 |

**கதிரேசு சின்னத்தம்பி (சின்னக்கண்டு)**

திதி: திரயோதசி (30.03.2003)

ஈராண்டுகள் சென்றிடினும் - எங்களில்
இரண்டறக் கலந்த உங்கள் நினைவுகள் அகலவில்லை.

சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

(16044)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## விண்ணுலக வாழ்வில் 3ஆம் ஆண்டு நினைவலைகள்



| அன்னையின் மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 1959 - 01 - 06 | 2000 - 04 - 02 |

**திருமதி தெய்வேந்திரன் சத்தியகலா(கலா)**

திதி: திரியோதசி (30.03.2003)

ஆண்டுகள் மூன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்

64,செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (16060)

கணவர், பிள்ளைகள், சகோதரிகள்,
சகோதரர்கள்,
அற்புதஜெயம்(G.S) குடும்பத்தினர்.


## அமிர்தாஞ்சன்




அமிர்தாஞ்சன் 100 ஆண்டுகளுக்கு மேலாக அனைவரது நம்பிக்கையையும் பெற்றுள்ள பெயர். அமிர்தாஞ்சன் பெயின் பாம், அமிர்தாஞ்சன் ஸ்ட்ராங் ஆகியவை அதன் தயாரிப்புகளில் அடங்கும். இவை பலவிதமான வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றது.

இறக்குமதியாளர்கள்
தொ.பே: 739899, 715700

## புதிய அத்தியாயத்தின் உதயம்

# ஏப்ரல் 1 முதல்

# வெள்ளவத்தையிலும்

நேர்த்தி, வசதி, சொகுசு நிறைந்த
நவீன காட்சியறை

FRENCH CORNER ®



எப்பாலாருக்கும், எவ்வயதினருக்கும்
எக்காலத்துக்கும், எத்தேசத்தவருக்கும் ஏற்ற
எல்லா ஆடைகளும், எல்லா அணிகலன்களும்
ஒரு சில அடிகள் வைத்து ஏராளமாகத் தெரிவு செய்யலாம்

**196, காலி வீதி, வெள்ளவத்தை.**

**(ஏப்ரல் 1 ஆம் திகதி - 10% விலைக் கழிவு )**

காட்சியறைகள் :

பொரளை, ஹைட் பார்க் கோணர், மஹரகமை, தெஹிவளை, தெஹிவளை தெற்கு, நுகேகொடை, நுகேகொடை 7ம் கட்டை

## வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்

யாழ்ப்பாணம்

**பதவி வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)**
**வெளிக்கள இணைப்பாளர்**
**மாதாந்த வேதனம் ரூபா 6,000**

யாழ்.மாவட்டத்தில் யுனிசெவ் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனம் மேற்கொள்ளும் மிதிவெடி அபாய கல்வித்திட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கு மீள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*தகைமைகள்:* விண்ணப்பதாரி 24இற்கும் 45வயதுக்கும் இடைப்பட்டவராகவும் G.C.E.A/Lஇல் திறமைச் சித்தியும் கணனி அறிவும் ஆங்கிலத்தில் பேச எழுத சரளமான அறிவுள்ளவராகவும் மோட்டார்சைக்கிள் அனுமதிப் பத்திரம் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை (ஆங்கிலத்தில்) கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் 01-04-03 இலிருந்து 04.04.03 வரை நண்பகல்வரை நேரில் சமர்ப்பிக்கவும்.

தலைவர்,
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,
13, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (16127)



உ
ஓம் சரவணபவ

## சுழிபுரம் - பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி கோவில்

பிரதம குரு
**பிரம்மஸ்ரீ மு.பாலகுருசாமி சர்மா தம்பதிகளின்**
**பீமரத சாந்தி வைபவத்தை முன்னிட்டு**
**நியந்த்ரீ அனுசரணையுடன் நடைபெறும்**

## நூல் வெளியீட்டு விழா

காலம் : சித்ரபானு வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி (பு.நே.)
இடம் : நல்லூர் சிவன்கோயில் மண்டபம்
தலைவர் : பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் *(கலைப் பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம், தலைவர், நியந்த்ரீ)*
வெளியிடப்படும் நூல் : ஸ்ரீசுப்பிரமணய நவகண்ட யந்த்ர பூஜையும் ஸ்கந்த ஹோமமும்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நியந்த்ரீ,
சிவன்கோயில்,
நல்லூர்.

**பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண சர்மாவும் சகோதரர்களும்.**
*ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், பறாளை, சுழிபுரம்.*

(C/27047)

*விளம்பர அனுசரணை:* **ஸ்கைலாக் ஏஜென்சி**
பிரதான வீதி, சுழிபுரம்
தினசரி பத்திரிகைகள், பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப் பொருள்கள், BOND பரீட்சை வினாத்தாள்கள் விற்பனையாளர்.


## அடகு நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,மார்ச்30

ஹற்றன் நஷனல் வங்கியின் வவுனியா கிளையில் 31.01.2002ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை எதிர்வரும் ஏப்ரல் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

நகைகளை 25.04.2003 ஆம் திகதிக்கு முன்னர் மீட்கும் படி அல்லது அருகில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையைத் தொடர்பு கொண்டு வட்டியைச் செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளும்படி வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## தீவக நலன்காப்பக அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்30

தீவக மக்கள் நலன் காப்பகத்தின் அலுவலகம் வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இந்த அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றி வைத்ததுடன் அலுவலகத்தையும் திறந்து வைத்தார். மக்கள் நலன் காப்பகத்தின் பெயர்ப்பலகையை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

(எ-8)

## புராணபடனம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று வரும் கந்தபுராண படனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 'சூரபன்மன்வதைப் படலம்' படிக்கப்படும். ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி சபாபதி தங்கப்பொன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பௌராணிகர் பலர் கலந்துகொள்வர்.

(எ)


## உழவு இயந்திர சாரதி தேவை

பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரம் ஓட்டக்கூடிய நன்கு அனுபவமுள்ளவர் தேவை. தகுதியான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**புறோமோட்டோர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்,**
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/27046)



## Jaffna Social Action Center

**(JSAC)**
**Walk in Interview**

**Vacancy for The Post of Project Officer, Thenmaradchy**

Required Qualification;

- Secondary Education
- Experience - Minimum of 2 years working in the area of Social Service, Development and / or Gender issues.
- Very good communication and problem solving skill.
- Degree in Social Science desirable.

*Preference will be given to those from Thenmaradchy*

Venue : 159, 4th Cross Street, Jaffna. (Near Jaffna Courts)
Date : 31.03.2003 Monday
Time : 2.00 p.m. - 3.00 p.m.

Co-ordinator,
Jaffna Social Action Center,
159, 4th Cross Street,
Jaffna.

T.P. No: 021 - 2223699

(C/27042)


## மரண அறிவித்தல்

### Dr.சீவர்த்தினம் வடிவேலு

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த Dr.சீவரத்தினம் வடிவேலு சிட்னி, ஆஸ்திரேலியாவில் 27.03.2003 அன்று காலமானார்.

அன்னார் பார்பதாவின் அன்புக் கணவரும் Dr.சிவராமன் (U.S.A.), ஜயராமன் (கனடா), ரகுராமன் (ஆஸ்திரேலியா), பாமினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் Dr.நளாயினி, சந்திரிகா, ராதிகா, சுயேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2003) திங்கட்கிழமை சிட்னியில் நடைபெறும்.

*"தேவகிரி"*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
போதகர்
சி.சிதம்பரப்பிள்ளை

(16136)


அதிநவீன கற்பித்தல் உபகரணங்களை உபயோகித்து
முற்றுமுழுதாக ஆங்கில மொழி மூலம்



**பாலர் பாடசாலை பாட நெறிகள்**
(திங்கள் முதல் வெள்ளி வரை)

- Play Group (2+ to 3+குழந்தைகளுக்கு)
- Montessori School (3+ to 4+ குழந்தைகளுக்கு)
- Pre School (4+ to 5+ குழந்தைகளுக்கு)

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் போன்ற தூரப் பிரதேச குழந்தைகளுக்காக சனி அல்லது ஞாயிறு தினங்களில்

Saturday Prep - School 9.00 a.m - 4.00 p.m
Sunday Prep - School 9.00 a.m - 4.00 p.m

உங்கள் குழந்தைகளின் ஆங்கில அறிவும், பேசும் திறனும் சிறு வயதிலேயே வளர்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கிழமை நாட்களில் மற்றைய சிறார்களுக்குக் கற்பிக்கப்படும் முழுபாடவிதானமும் இவ்வார இறுதிநாளில் பூர்த்தி செய்யப்படும்
வாரத்தில் ஒரு நாள் மட்டும்

**ஆங்கிலப் பாடநெறிகள் - ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய பிரிவு ஆரம்பம்**

**வளர்ந்தோருக்கான ஆங்கிலப் பாடநெறிகள்**



- Advanced Diploma in English — 6 MONTHS
- Diploma in English — 6 MONTHS
- Certificate in English — 6 MONTHS



சிறுவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறிகள்

உங்கள் குழந்தை 5+ முதல் 14+ வயதிற்கு உற்பட்டவரெனில் அவரின் ஆங்கில அறிவை வளர்க்க ஒரு அரிய சந்தர்ப்பம்

- Level 4 Upper Intermediate — 6 MONTHS
- Level 3 Intermediate — 6 MONTHS
- Level 2 Lower Intermediate — 6 MONTHS
- Level 1 Foundation — 6 MONTHS

வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களின் வசதிக்காக Jaffna Kachcheri Campus இலும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. விரைவில் பதிவு செய்யவும்.

# BRITISH BUSINESS SCHOOL

JAFFNA CITY CAMPUS: 140, Temple Road, Jaffna. JAFFNA KACHCHERI CAMPUS: 174, Kandy Road, Jaffna.

# NOTIFICATION

## ST.JOHN'S COLLEGE, JAFFNA.

## OLD BOYS ASSOCIATION ANNUAL GENERAL MEETING

The 88th Annual General Meeting of the Old Boys' Association is scheduled to be held on the 12th of April 2003 (Saturday) at 8.30 a.m. in the College Auditorium.

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 5th of April 2003.

The programme for the day shall be published in due course.

No individual invitations would be sent.

Breakfast (30/-) and Lunch (100/-) Tickets are available from the treasurer Mr. T.Nanthakumaran.

Live members are kindly requested to contact the Treasurer, the Secretary or the College Office with their membership card in view to build -up a new membership register.

**K.Kesavan,** President. (C/27054) **P.Thayaparan,** Secretary.

---

வடமராட்சி - அல்வாய் மேற்கு - தேவரையாளி
கண்ணகை அம்பாள் தேவஸ்தான பரிபாலனசபை

### வருடாந்த உற்சவ அறிவித்தல்

வடமராட்சி - அல்வாய் மேற்கு - தேவரையாளி கண்ணகை அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம் 30.03.2003 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 08.04.2003இல் சங்காபிஷேகத்தையடுத்து நண்பகல் தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.

மேற்படி தேவஸ்தானத்திற்கு நிதி உதவி புரிய விரும்புவோர் நெல்லியடி, இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்கு இலக்கம் - 8770இற்கு அனுப்பிவைக்குமாறும் பொருளுதவி செய்யவிரும்புவோர் மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையிடம் ஒப்படைத்து பற்றுச்சீட்டினை பெறுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

(16150) - மேற்படி தேவஸ்தான பரிபாலன சபையினர், அல்வாய் மேற்கு.

---

## தமிழீழ வைப்பகம்

### அறிவித்தல்

யாழ். குடாநாட்டிற்கான தமிழீழ வைப்பகக் கிளை பளை நகரில் செயற்படத் தொடங்கியுள்ளது. எனவே, யாழ். குடாநாட்டில் வசிக்கும் வழமைதாரர்கள் பளை நகரிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளையுடன் தொடர்புகொண்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-27052)

---

## இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்

### புனருத்தாரண ஆண்டு நிறைவும் பரிசளிப்பு வைபவமும்

தலைவர் :- திரு.சொ.ஹரிஹரன் *(இணுவில் பொது நூலகம்)*
காலம் :- நாளை (31.03.2003) திங்கட்கிழமை பி.ப.3 மணி
பிரதம விருந்தினர் :- பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் *(துணைவேந்தர், யாழ்.பல்.கழகம்)*
சிறப்பு விருந்தினர் :- திருமதி சி.செல்வவிநாயகன் *(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*
மங்கள இசை :- N.R.K.இரத்தினகுமார் N.R.K.வாகீஸ்வரன் குழுவினர்
தொடக்கவுரை :- திரு.க.தேவராஜா (போசகர்) *(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)*
பரிசில்வழங்கல் :- பொது அறிவுப் போட்டி, கணனிப் பரீட்சை, மரதன் ஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம், காற்பந்து, துடுப்பாட்டம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
கோவிலடி,
இணுவில்.

இணுவில் பொது நூலகம். (16138)

---

## கண்ணீர் அஞ்சலி

மாண்புமிகு புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் அமைச்சின்
கௌரவ அமைச்சர்
ஜயலத் ஜயவர்த்தனா அவர்களின் அன்பு மாமனார்

### எச்.எம்.பி.அப்புகாமி

(பிரபல சமூக சேவையாளரும், பிரபல வர்த்தகரும்)

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(16134) - நண்பர்கள்.

---

## மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டி ஜூன் மாதம் நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் மாகாணமட்டத் தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

அதற்கு முன்னதாக பாடசாலை மட்ட மற்றும் வலய மட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் மே மாத இறுதிக்குள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான சுற்றறிக்கை மாகாணக் கல்வி அமைச்சினால் சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

சுற்றறிக்கை கிடைக்கப்பெறாத பாடசாலைகள் கல்வி வலயங்களுடன தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## பாராட்டுவிழா

நவாலி,மார்ச்30

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆனைக்கோட்டை கிராமசேவையாளர் வை.சந்திரராசா தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டிக்கௌரவிக்கும வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விழா இன்று மாலை 3 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் புத்தொளி ந.சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-100)

## 'தீனா குறூப்' என்று கூறி தாக்குதல்

இரவு வேளை தனது வீட்டு வாசலருகே நின்றவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாம் 'தீனா குறூப்' எனக்கூறி மூர்க்கத்தனமாகத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் அண்மையில கைதடி தென்கிழக்கில் இடம்பெற்றிருக்கிறது.

இச்சம்பவத்தில் கைதடி தென்கிழக்கைச் சேர்ந்த சின்னையா கந்தசாமி(வயது 49) எனும் குடும்பஸ்தரே தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ஒ-75)

## குடாநாட்டில் பெற்றோல் விலை உயர்வு

யாழ் குடாநாட்டிலுள்ள எரிபொருள விற்பனை நிலையங்களில் பெற்றோலின் விலை கடந்த வியாழக்கிழமை முதல் லீற்றருக்கு இரண்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் லீற்றர் 61 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட பெற்றோலே தற்போது 63 ரூபா 50 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. (ஐ-17)


### வேலையாள்கள் தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. சாப்பாட்டுடன் தங்குமிட வசதியும் உண்டு.

K.R.S. அரிசி ஆலை
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம். (16137)

லக்ஷ்மி இணுவில்
பார்த்திபன், திவ்வியா உன்னி, ரஞ்சித், வடிவேலு நடித்த
சபாஷ் (ரீலீஸ்)
தினசரி 11.00, 2.00, 7.00 (பு.நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், ரீமாசென், வடிவேல்
பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்

நிர்மலா சுன்னாகம்
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணி
HOLLOW MAN

நாகம்ஸ் சுன்னாகம்
விஜயகாந்த், சௌந்தர்யா, கபாலி, செந்தில் நடித்த
சொக்கத்தங்கம்
நாளை முதல் வசீகரா (16136)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசம்பிள்ளை இராசமணி

*(பேபி - காரைநகர் - கருங்காலி - களபூமி)*

காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசம்பிள்ளை இராசமணி நேற்று (29.03.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முருகேசம்பிள்ளை அவர்களது அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (**Banker**) - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிர்மலா, ரோகினி, லோகேஸ்வரி, கோமதி (ஜேர்மனி), சாந்தி (நோர்வே), தவமணி (பிரான்ஸ்), சோதி, நரேந்திரன் (லண்டன்), முருகானந்தன் (ஜேர்மனி), அமரர் சரவணபவன் மற்றும் சுப்பிரமணியம் (வீரகேசரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வரட்ணம், பரமசாமி (பராஸ்), மகேந்திரன், ரவீந்திரன், தவேந்திரன், ஸ்ரீஸ்கந்தராஜா, பாலசுப்பிரமணியம், சாந்தகுமாரி, ஹேமலதா ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஷனி, நிஷாந்தி, மயூரதி, பவித்திரா, கார்த்திகா, அஜந்தன், சுதர்சன், யசோதினி, லயவாணி, அபிராமி, நிரோஸன், நிரோஜினி, தேவப்பிரியன், ஹேஜன், வித்தியாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற கனகசபை (கணேசன் ஸ்ரோர்ஸ்), மகாலஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56, சீனியர் லேன்,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*
*T.P. No: 222 3816* (16148)

தகவல்:
பொ.முருகேசம்பிள்ளை
(கணவர்).

## சின்னத்தம்பி நவரத்தினம்

(உரிமையாளர், குகன் அச்சகம், தெல்லிப்பழை)

வீமன்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னத்தம்பி நவரத்தினம் நேற்று (29.03.2003) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராசா மகேஸ்வரியின் சகோதரனும் வனஜா (கனடா), சாந்தினி, கலாதேவி (பிரான்ஸ்), நந்தினி, குகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அரியராசா மற்றும் மகாலிங்கம் (போதனா வைத்தியசாலை யாழ்.), அருட்செல்வம் (ஜேர்மனி), சிவகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணியளவில் கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உப்பு மடத்தடி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (16146)

தகவல்:
ந.மகாலிங்கம்
(மருமகன்)

## வைத்திலிங்கம் சுந்தரம் (நடேசு)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் புதுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுந்தரம் (நடேசு) நேற்று (29.03.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் தம்பித்துரை (புதுமடம்), சற்குணராஜா (பிரான்ஸ்), யோகராணி (ஆத்திசூடி வீதி), இந்திராணி (ஆனைக்கோட்டை), வசந்தமாலா (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), கௌசலாதேவி (புதுமடம்), மதியழகி (லக்கி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி (அராலி), உதயரஞ்சினி (பிரான்ஸ்), இரத்தினம் (ஆத்திசூடி வீதி), இராஜேந்திரம் (ஆனைக்கோட்டை), பாலரஞ்சன் (பிரான்ஸ்), தேவராஜா (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (மட்டுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லப்பா, மாரிமுத்து, சுந்தரம் மற்றும் கிருஷ்ணபிள்ளை, தம்பிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*புதுமடம், மானிப்பாய்.* (16144)

தகவல்:
தம்பித்துரை (மகன்),
பாலசுப்பிரமணியம் (மருமகன்).

## பண்டிதர் மா.மாணிக்கம் (அளவெட்டி)

(இளைப்பாறிய அதிபர்)

வேலணையூரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் பண்டிதர் மா.மாணிக்கம் அவர்கள் 27.03.2003 வியாழக்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகமணி - சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும் காந்திதாசன் (கணக்காளர், U.S.A.), சத்தியமூர்த்தி (கணக்காளர், U.K.), சந்திரகாந்தன் (முகாமையாளர், மக்கள் வங்கி, உரும்பிராய்), காந்திமதி (கொழும்பு), இந்துமதி (கனடா), இந்துசேகரன் (பொறியியலாளர், U.K.), பானுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசந்திரன் (அரச உத்தரவு பெற்ற நில அளவை வரைஞரும், காந்தி ஜுவல்லர்ஸ் உரிமையாளரும்), ஸ்ரீகரன் (T.D. வங்கி, கனடா), விக்கினேஸ்வரன் (மின்சார ஒப்பந்தகாரர், கனடா), சத்தியலட்சுமி (U.S.A.), சசிகலா (U.K.), இந்திராதேவி, சுகந்தி (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் சபேசன், ஆனந்தி, தினேசன், கௌதமி, ஜனனி, அபிராமி, அசோக், ஆனந்த், லவன், மதுரா, பிருந்தா, கிருஷ்ணா, அருண், ஆரபி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31.03.2003) திங்கட்கிழமை காலை 10 மணிமுதல் ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கிரியைகளின் பின் மாலை 3.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*13A, 1/6 பசல்ஸ் லேன்,*
*கொழும்பு - 6*
*T.P.: 502061* (16143)

தகவல்:
மா.சந்திரகாந்தன்.
(மகன்)

## சீன மீனவரின் சடலம் புலிகள் கையளிப்பு

கிளிநொச்சி,மார்ச்30

முல்லைத்தீவுக் கடலில் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சீன றோலரில் இருந்த சீன மீனவர் ஒருவரின் சடலம் நாகர்கோயிலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்றுமுன் தினம் கரை ஒதுங்கியுள்ளது. அச்சடலம் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

நாகர்கோயில் பகுதியில் சடலம் கரை ஒதுங்கிய தகவல் அப்பகுதி மக்களால் விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. சடலத்தை மீட்ட விடுதலைப் புலிகள் அதனைச் சுத்திகரித்து பேழையில் வைத்து கிளிநொச்சியில் இருந்து தமிழீழ காவல்துறை மரியாதையுடன் வவுனியாவுக்கு எடுத்துச் சென்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்தனர்.

(ம-3)

## போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு உறுதி வழங்கியுள்ளது.

அரசியல் பணிகளை மேற்கொண்டிருந்தவேளை தமது போராளி தாக்கப்பட்டமை யுத்த நிறுத்த மீறல் செயல் என விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸ் தரப்பினரும் விடுதலைப்புலிகளின் தரப்பினரும் நேற்றுக் கலந்துரையாடினர்.

சம்பவத்தில் தொடர்புடைய கான்ஸ்டபிள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும் -

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க ஏற்பாடு செய்வதாகவும் - பொலீஸ் தரப்பினர் உறுதியளித்துள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

(ம-3)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார். அவர் ஓரிரு கூட்டங்களை நடத்திய பின்னர் வேறு கூட்டங்களை நடத்த முன்வராமையால் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் அப்பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தற்பொழுது அவரும் கூட்டங்களை நடத்தாமையால் கூட்டமைப்பு தொடர்பான செயற்பாடுகள், முன்னெடுப்புகள் பற்றி கலந்துபேச முடியாதநிலை உள்ளது என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுவில் கூட்டணியின் சார்பில் இரா.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி ஆகியோரும தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, என்குமர குருபரன் ஆகியோரும் ரெலோவின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன், என். ஸ்ரீகாந்தா ஆகியோரும் ஈ.பி. ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (ஐ-10)

## நகரின் மத்தியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டைப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

முகாம் அமைப்பதற்காக அந்தப் பகுதியைத் துப்பரவு செய்யும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு யாழ்.குடாநாட்டின் பொது அமைப்புகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. முகாம் அமைப்பதை எதிர்த்து எழுச்சிப் போராட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவை செய்து வருகின்றன.

இந்த நிலையில், புதிய முகாம் அமைக்கும் விடயத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமும் கடும் போக்கைக் கடைப்பிடிக்கும் என்று தெரிகின்றது.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு விரோதமாக இராணுவம் புதிய முகாம் ஒன்றை அமைப்பது புலிகளின் தலைமையை சீண்டி விட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது சமாதானப் பேச்சில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜப்பான் பேச்சுக்களை முடித்து நேற்றுமுன்தினம் கிளிநொச்சி திரும்பிய விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் இந்த விவகாரம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

நகரின் மத்தியில் புதிய முகாம அமைக்கப்படுவது மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கக் கூடிய விடயம் என்பதால் விடுதலைப் புலிகள் இதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர்.

இராணுவ சமநிலை பேணப்பட வேண்டும் என்ற புரிந்துணர்வு ஒப்பந்த சரத்தைக் காரணங்காட்டிக் கொண்டு இராணுவம் இத்தகைய செயலில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று புலிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ம)

## புதிய இராணுவத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய மகஜர்களை நாளை திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், யாழ்.அரசாங்க அதிபர், 512 ஆவது படையணி அதிகாரி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அதிகாரி ஆகியோருக்கு கையளிப்பது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

பெரும்பாலும் எதிர்ப்புப் போராட்டங்கள் நாளை மறுதினம் அல்லது புதன்கிழமை ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்மாநகரசபை வளாகம், கோட்டைப்பகுதி மற்றும் கற்றாடலில் இராணுவத்தளம் அமைக்கப்பட்டால் குருநகர், பாஷையூர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்றும் - காங்கேசன்துறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் மீன்பிடிக்க முடியாதுள்ள தற்போதைய நிலைமை மேற்படி பிரதேசங்களிலும் ஏற்படக்கூடிய அபாயநிலை உருவாகும் என்றும் -

மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

முதலாம் குறுக்கு வீதியில் சமாசத்தின் காணியில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலையை இயக்க வேண்டாம என்று படைத்தரப்பு விடுத்துள்ள உத்தரவு மீனவர்களுக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(ம-3-10)






ஏசியன் வீட்டுத் தளபாடம்
Dealer in Furniture Matters and Plastick Items
இல:133, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் அருகாமை)


## மரண அறிவித்தல்

செல்வன்

### பிரகாஸ் தண்டாபானி தேசிகர்

[illegible]

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாஸ் நேற்று (29.03.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோ.தண்டாபாணி தேசிகர் (J.P.,வல்லை முத்துமாரி அம்மன தேவஸ்தான பிரதமகுரு)-மகாவல்லியம்மா தம்பதிகளின் அருமைப் புத்திரன் ஆவார்.

அன்னாரின் கிரியைகள் இன்று 30.03.2003 பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தண்டாபாணிதேசிகர் (தந்தை)

*வன்னிச்சி அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.* (சி-27056)


யாழ்.குடாநாட்டில்
K.R.S. No. I சம்பா
K.R.S. No. I றோஸ்நாடு
50, 10Kg அளவுகளில் எல்லா வர்த்தக ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.
K.R.S. அரிசி ஆலை.
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
(16087)



அழகிய கூந்தலின் ரகசியம்





பயோட்டினெக்ஸ்-E

எது உங்கள் பிரச்சினை ?

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

பயோட்டினுடன் விட்டமின் - Eயும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்



இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

BIOTINEX - E

பாவனை முறை: தினம் 2 கப்சியூல்ஸ் 3 மாத காலத்திற்கு பாவிக்கவும்

இயற்கையான பயோட்டினெக்ஸ்-E நெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

யாழ் முகவர்
ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 2223191

வன்னி முகவர்
அகிலன்ஸ் பார்மசி, (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By : Arkem Colombo
Tel : 470290, 075-344436 Email : arkem@sltnet.lk

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.



ராம்கோ சிமெந்து
RAMCO CEMENT

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சீமெந்து நாளை (31.03.2003) திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. தேவையானோர் முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 2350
(சி-27055)


## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் உதயறஞ்சினி

*(கொல்லங்கலட்டி)*

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இளவாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் உதயறஞ்சினி நேற்று (29.03.2003) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் பத்மநாதன் (உரிமையாளர், கரன் லான்மாஸ்ரர்) அவர்களின் அன்பு மனைவியும் செல்லக்குட்டி - காலஞ்சென்ற கனகம்மா தம்பதிகளின அருமை மகளும் மதி, கரன், கௌரி, மைதிலி, கணேஸ், சிவா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ராணி, உதயம், தவம் (கணபதி நிறுவனம், உரும்பிராய்), சாந்தா, சந்திரன், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அப்பன், சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகநாதன் (முகாமையாளர், ப.நோ.கூ.ச., தெல்லிப்பழை), மகேஸ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான், முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுவிளான், இளவாலை.* (16149) தகவல்: தவம் (சகோதரன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



# அப்பு, ஆச்சி ஆண்ட மண்ணில்....

ந.பரமேஸ்வரன்

**1** **கீரி**மலை இந்துக்களுக்கு ஒரு புனிதஸ்தலமாகக் கருதப்படும் அதேவேளை பிறமதத்தவர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் சுற்றுலா மையமாகக் கருதப்படுகிறது. இந்தக் கீரிமலையில்தான் நானும் இருபத்தெட்டு வருடங்களை ஓட்டினேன்.

கீரிமலை முந்நூறு குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய கிராமம். ஆனால், கீரிமலைக்கு விஜயம் செய்யாத வி.ஐ.பிக்களோ கிடையாது. யாழ்ப்பாணத்திற்கு யார் வருகை தந்தாலும் அவர்கள் கீரிமலைக்கும் ஒரு முறை விஜயம் செய்தே போவார்கள. யாழ்.மாவட்டத்திலேயே மிக உயரமான நிலப்பரப்பையுடைய பிரதேசம் கீரிமலை. கடல் மட்டத்திலிருந்து அறுபது அடி.

கீரிமலைக்கு யாத்திரிகர்களும் உல்லாசப்பிரயாணிகளும் வந்து செல்வதால் கீரிமலையில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. யாழ்.மாவட்டத்தில் யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு அடுத்தபடியாக கூடுதலான பேருந்துகள் தரிக்குமிடமாக கீரிமலை பேருந்து நிலையமே விளங்கியது. யாழ்ப்பாணத்திலிருந்து எந்தப் பேருந்தில் ஏறினாலும் கீரிமலைக்குச் செல்லலாம். (வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் தவிர்ந்த) 769இல் பேருந்து காங்கேசன்துறை வீதியூடாக காங்கேசன்துறைவரை சென்று கீரிமலை செல்லும். 764 பலாலி வீதியால் பலாலிச் சந்திவரை சென்று மயிலிட்டி, காங்கேசன்துறை ஊடாக கீரிமலை செல்லும். 788 மானிப்பாய் வீதியால் விளான் சந்தியூடாக கீரிமலை செல்லும். 768 கந்தரோடை, அளவெட்டி ஊடாக கொல்லங்கலட்டி சென்று கீரிமலையை அடையும். 787 இலக்க பேருந்து மானிப்பாய், சங்கானை ஊடாக மாதகல் வரை சென்று திரும்ப பண்டத்தரிப்புச் சந்திக்கு வந்து பின் இளவாலையூடாக கீரிமலை செல்லும் 795 இலக்க பேருந்து காங்கேசன்துறை வீதியூடாக தெல்லிப்பழைச் சந்தி வரை சென்று பன்னாலை, கருகம்பனையூடாக கீரிமலை செல்லும். இவை யாழ்.நகரிலிருந்து கீரிமலை செல்லும் பேருந்துகள். இவற்றைவிட பருத்தித்துறையிலிருந்து கீரிமலைக்கு 763 இல. சேவையும் நடத்தப்பட்டது. இப்பேருந்து பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வழியாக வல்வெட்டித்துறை, சந்நிதி, பலாலி, மயிலிட்டியூடாக காங்கேசன்துறை சென்று கீரிமலை செல்லும்.

இவற்றில் இப்போது 763 இலக்க சேவை முற்றாக நிறுத்தப்பட்டு விட்டது. 769 தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் வரை செல்கிறது. 764 தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியுடன் நிறுத்தப்படுகிறது. 768 அம்பனை வரை செல்கிறது. 795 இளவாலை வரை செல்கிறது. 788 இளவாலை வரை செல்கிறது. 787 மாதகல் வரை செல்கிறது.

கீரிமலையில் பல மடங்கள் இருந்தன. சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், செகராசசிங்கம் மடம், சடையம்மா மடம் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சிறாப்பர் மடம் கீரிமலைக்கு வருவோருக்குச் சிறந்த சேவையை வழங்கி வந்தது. இங்கு தினமும் மண்சாடியில் மோர் கரைத்து வைக்கப்படும். கீரிமலைக்கு வருவோரின் தாகம் தீர்ப்பதற்காக இதற்காக ஒருவர் மட நிர்வாகத்தினரால் மாதச்சம்பளம் கொடுத்து நியமிக்கப்பட்டிருந்தார். தினமும் சித்திரமேழிக்குச் சென்று மோர் வாங்கி வந்து கரைத்து வைப்பதுதான் இவரது தொழில். இவருக்கு ஓய்வூதியமும் மட நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டு வந்தது. நாங்கள் பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது பெரும்பாலும் மோர் அருந்திவிட்டே செல்வோம். வீட்டுக்குப் போவதற்கு கிட்டிய பாதை இருந்தும் மோர் அருந்துவதற்காக சந்திக்கு வந்து மோர் அருந்திவிட்டே வீடு செல்வோம்.

கீரிமலையில் வீர சைவமடம் ஒன்றும் இருந்தது. இது இரேணுகாச்சிரமம் என அழைக்கப்பட்டு வந்தது. இந்தியாவில் பல இடங்களில் பல வீர சைவமடங்கள் இருந்த போதும் இலங்கையில் காணப்பட்ட ஒரேயொரு வீரசைவமடம் இரேணுகாச்சிரம மடமே.

கீரிமலையில் பல வி.ஐ.பிக்கள் தமது ஓய்வு நாள்களைக் கழிப்பதற்காக விடுமுறைக்கால விடுதிகளையும் (Holiday Bungalow) அமைத்திருந்தனர். இந்த வீடுகளில் பெரும்பாலும் காவல்காரர்களே இருப்பர். வீட்டு உரிமையாளர்கள் மூன்று மாதங்களுகொருமுறையோ நான்கு மாதங்களுக்கொருமுறையோ வந்து தங்கி நின்றுவிட்டுப் போவார்கள். இயற்கைச் சூழலில்மைந்த கடற்காற்றை அநுபவிப்பதற்காகவே இவர்கள கீரிமலைக்கு வருவது வழக்கம்.

இவர்களில் அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்டவரும் பிரபல கணித மேதையுமான பேராசிரியர் செ. சுந்தரலிங்கம், பிரபல சட்டத்தரணி பார்குமாரகுலசிங்கம், புரோக்கர் செல்லமுத்து ஆகியோரின் வீடுகள் குறிப்பிடத்தக்கன. இவ்வீடுகள் இவர்களின் வசதியை எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருந்தன.

தமிழழக் கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்தவர் சுந்தரலிங்கமே. சுந்தரலிங்கத்தின் தமிழீழ வரைபடம் கதிர்காமத்தையும் உள்ளடக்கியதே தமிழீழம் எனக் குறிப்பிடுகிறது.

சுந்தரலிங்கத்தின் வீடு பழைய காலத்தைய நாற்சதுர வீடு. வீட்டின் நடுவே பூந்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. பூந்தோட்டத்தினுள் வட்டவடிவமான செங்கமலத் தடாகம் ஒன்றும் மல்லிகை முல்லைப் பந்தல்களும் காணப்பட்டன. சுந்தரலிங்கத்தின் வேலையாள் மரு, மருக்கொழுந்து போன்ற அரிய வாசனைச் செடிகளையும் பயிரிட்டு வெகு கவனமாகப் பராமரித்து வந்தார். ஆலய உற்சவங்களின்போது ஐயர்மார் வந்து மரு, மருக்கொழுந்து போன்றவற்றைப் பெற்றுச்செல்வர்.

சுந்தரலிங்கத்தின் வீட்டின் நடுவே பெரிய நூலகம் ஒன்றும் இருந்தது. எட்டு பெரிய இறாக்கைகளில் மொத்தமான சட்ட நூல்களும் அரசியல் மற்றும் வரலாற்று நூல்களும் சுந்தரலிங்கத்தின் நூற்சேர்க்கையில் காணப்பட்டன. நூலகத்தின் நடுவே சாய்மனைக் கதிரையில் அமர்ந்து சுந்தரலிங்கம் நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார். வீட்டின் நடுவே எட்டு தொடக்கம் பத்துப் பேர் அமரக் கூடிய ஊஞ்சல் ஒன்றும் இருந்தது. வயோதிப காலத்தில் சுந்தரலிங்கமும் மனைவியும் இவ்வூஞ்சலில் அமர்ந்து காலால் உதைத்து ஊஞ்சலாடிய வண்ணம் உரையாடிக் கொண்டிருப்பர். ஊஞ்சலின் கொழுக்கிகள் யாவும் பித்தளையிலேயே அமைக்கப்பட்டிருந்தன. வீட்டைச் சுற்றிலும் சிறு வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய மரத்தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. தூணின் உச்சியில் மகரப்பட்சி செதுக்கப்பட்டிருந்தது. இதைவிட சுந்தரலிங்கத்தின் வீட்டு மதிலிலும் கேற்றிலும் மகரப்பட்சிகள் செதுக்கப்பட்டிருந்தன. ஆடி அமாவாசை, சிவராத்திரி தினங்களில் சுந்தரலிங்கத்தின் வீட்டு வாசலில் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்படும் தகரத்தினாலான மூக்குப் பேணியில் மோரும் சர்க்கரைத் தண்ணீரும் வழங்கப்படும்.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சுந்தரலிங்கம், செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டார். சுந்தரலிங்கம் கீரிமலையில் வசித்தாலும் கீரிமலையில் பெரும்பாளானோர் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களாகவே இருந்தனர். நாங்களும் எமது பக்கத்து வீட்டுக்காரரும் சுந்தரலிங்கத்தின் ஆதரவாளர்களாகவே இருந்தோம். சுந்தரலிங்கம் சேவல் சின்னத்திலும் செல்வநாயகம் வீட்டுச் சின்னத்திலும் போட்டியிட்டனர். நானும் பக்கத்து வீட்டு சறோவும் பாடசாலை செல்லும்போது ஒன்றாகவே செல்வது வழக்கம். அப்போது

> **உயர்பாதுகாப்பு வலயம் இன்று சகல ஊடகங்களிலும், சகல அரசியல்வாதிகளாலும் பேசப்படும் விடயம். இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக H.S.Z.என அழைக்கிறார்கள். (High Security Zone) என்பதன் சுருககமே H.S.Z. அமெரிக்கா கூட அக்கறை செலுத்தும் அளவுக்கு H.S.Z. பிரச்சினை முக்கியத்துவம் பெற்றுவிட்டது. ஓய்வுபெற்ற இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சதீஷ் நம்பியாரை உயர்பாதுகாப்பு வலயம் சமபந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரிக்கைவிடுத்து வரவழைத்துள்ளது. பாதுகாப்பு வலயத்தினுள் தான் வாழ்ந்த பசுமை நிறைந்த நாள்களை ஒருதரம் பின்நோக்கிப் பார்க்கிறார் கட்டுரையாளர்.**
>
> **தற்போது தென்மராட்சியிலும் யாழ்நகரிலும் சில இடங்கள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதிலும் வலிகாமம் வடக்கை மையமாகக் கொண்டே இக கட்டுரை வரையப்பட்டுள்ளது.**

சந்தியில் நிற்கும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் சேவலை வைத்து ஒன்றும் செய்யமுடியாது, வீடு கட்டினால்தான் வீட்டில குடியிருக்கலாமென்று கேலிசெய்வார்கள். நாங்களும் பதிலுக்கு ஏதாவது சொல்லி விட்டுப் போவோம்.

பார்குமாரகுலசிங்கம் தந்தை செல்வாவின் மைத்துனர். பிரபல சட்டதரணி, இவருக்கு கறுவாத் தோட்டத்திலும் வீடு உள்ளது. இவர் பின்னாளில் தனது பெயரை பார்குமாரகுலசிங்கி என்று மாற்றிக் கொண்டார். என்ன காரணமோ தெரியவில்லை. இவர்கள், வீட்டிலும் ஆங்கிலம்தான் பேசுவார்கள். யாராவது கிராமத்தவர்களுடன் உரையாடும் போது மட்டும் தமிழில் உரையாடுவர். பார்குமாரகுலசிங்கி, பண்டாரநாயக்கா கொலை வழக்கில் இரண்டாவது எதிரிக்காக வாதாடினார். அந்தப் பணத்திலேயே கீரிமலை வீட்டைக் கட்டியதாக அம்மா சொன்னார். இந்த வீட்டை அமெரிக்காவிலிருந்து பொறியியலாளரை அழைத்து வந்தே கட்டியிருந்தார்.

பார்குமாரகுலசிங்கத்தின் வீடு சுந்தரலிங்கத்தின் வீட்டிற்கு நேர்மாறாகக் காணப்பட்டது. சுந்தரலிங்கத்தின் வடு பழைய பாணியில் அமைந்தது. பார்குமாரகுலசிங்கத்தின் வீடு நவீன பாணியில் அமைந்திருந்தது. இரு வீடுகளும் அருகருகேயே காணப்பட்டன. இணைந்த குளியலறைகளுடன் ரெறாசோ பதிக்கப்பட்டிருந்த இவரது வீட்டு ஜன்னல்கள் யாவும் பச்சை நிறத்தில் அமைந்திருந்தன. இவரது வீட்டிற்கு தொலைபேசி இணைப்பும் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில் தொலைபேசி இணைப்பும் வழங்கப்பட்டிருந்தது.

அந்தக் காலத்தில் தொலைபேசி இணைப்பு எவிடமும் இருக்கவில்லை. தொலைத் தொடர்பு நிலையங்களும் இருக்கவில்லை. தபால் நிலையங்களிலும் அலுவலகங்களிலும் மட்டுமே தொலை பேசியைக் காணமுடியும். பிற்காலத்தில் பார் குமாரகுலசிங்கம் காலமான பிறகு திருமதி பார்குமாரகுலசிங்கி தனியாக வாழ்ந்து வந்தார். அப்போது வேலைக்காரியைக் கொண்டு ஒரு நாளைக்கு இரு தடவைகள் வீட்டைப் பொலிஷ் பண்ணுவது வழக்கம். திருமதி பார்குமாரகுலசிங்கி வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் சிங்கள மேல்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் அறைகளை வாடகைக்குக் கொடுத்து வந்தார். ஒரு நாளைக்கு இருநூறு ரூபா அறை வாடகை. நான் சொல்வது எழுபதுகளின் பிற்பகுதி. பார்குமாரகுலசிங்கியின் வீடும் 1987ஆம் ஆண்டு இடம்பெற்ற 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையின் போது தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது.

வடமாகாணத்திலேயே நீச்சல் தடாகத்துடன் அமைக்கப்பட்ட ஒரேயொரு உல்லாச விடுதியும் கீரிமலையிலேயே இருந்தது. இது 'தயா கோட்டேஜ்' (Daya Cottage) என அழைக்கப்பட்டது. இவ்விடுதிக்கு உல்லாசப் பயணிகளின் வருகை குறைவாகக் காணப்பட்டமையால் பின்னாளில் இவ்விடுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மட்டுமே காணப்படுவார். நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது எமது பேரனார் எம்மை அழைத்துச்சென்று பாதுகாப்பு உத்தியோகத்திடம் அனுமதி பெற்று எமக்கு விடுதியையும் நீச்சல் தடாகத்தையும் காண்பிப்பார்.

நான் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நான்காம் வகுப்புடன் கல்வியை முடித்துக் கொண்டு மகாஜனக் கல்லூரிக்குச் சென்றேன். மகாஜனக் கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்ததும் பேருந்திலேயே தினமும் பாடசாலை செல்ல வேண்டி வந்தது. 768, 795 இரண்டு பேருந்துகளிலும் கீரிமலையிலிருந்து மகாஜனக் கல்லூரிக்குச் செல்ல முடியும். 768 கீரிமலையிலிருந்து புறப்பட்டு மாவிட்டபுரம் கீரிமலை வீதியால் தச்சன்காட்டுச் சந்திவரை சென்று கொல்லன்கலட்டியூடாக அம்பனைக்கு வரும். 795 கீரிமலையிலிருந்து புறப்பட்டு கருகம்பனையூடாக அம்பட்டன் கலட்டிச் சந்தி (இது ஆலடிச் சந்தி எனவும் அழைக்கப்படுகிறது) ஊடாகப் பன்னாலை சென்று அம்பனை செல்லும்.

768இல் பிரயாணம் செய்தால் அம்பனைச் சந்தியிலிறங்கி பாடசாலை வரை சிறிது தூரம் நடக்க வேண்டும். 795இல் பிரயாணம் செய்தால் பாடசாலை வாசலிலேயே இறங்கலாம். 768இற்கு கட்டணம் பத்துச் சதம். 795இற்கு கட்டணம் பதினைந்து சதம். சில சமயங்களில் ஐந்து சதத்திற்கு ஐஸ்பழம் அருந்திவிட்டு 768வரும் வரை காவல் நின்று 768இல் வீடு செல்வதுமுண்டு. சில சமயங்களில் பாடசாலை முடிந்து வீடு திரும்புவதற்கென தந்துவிடும் பணத்திற்கு ஐஸ் சொக் அருந்திவிட்டு நண்பன் ரவியுடன் நடந்து சென்று ரவியின் வீட்டில் தென்னம்மட்டையில் வெட்டிய துடுப்பில் கிரிக்கெட் விளையாடி விட்டு ஆறு மணிக்குப் பின்னர் வீடு செல்வதுமுண்டு. பேருந்துச் செலவில் மிச்சம் பிடித்து ஐஸ்பழம் குடிக்கும் பழக்கம் காலப்போக்கில் பேருந்துக் கட்டணத்தை பாடசாலை வளவினுள் அமைந்திருந்த நடராசப் பெருமானுக்கு காணிக்கையாகச் செலுத்தும் பழக்கமாக மாறியது. காரணம் புதிதாக பெனடிக்ற் என்ற ஆங்கில ஆசிரியர் எமது பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவந்ததுதான். பெனடிக்ற் மாஸ்டரிடம் அடி வாங்காத மாணவர்களே இலலை. பெனடிக்ற் சில்வாலையைச் சேர்ந்தவர் கறுப்புக்கண்ணாடியுடன் B.S.A. மோட்டார் சைக்கிளில்தான் பாடசாலைக்கு வருவார். அப்போது மோட்டார் சைக்கிள் பாவனை மிகவும் குறைவு. விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே மோட்டார் சைக்கிள் வைத்திருந்தனர். அதுவும் B.S.A.தான். ஆங்கிலப் பாடம் மதிய இடைவேளைக்குப் பின்னர்தான் நடைபெறும். பெனடிக்ற் மாஸ்ரர் வருகிறார் என்றாலே குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்குமளவுக்கு நிசப்தம் வகுப்பறையில் நிலவும். பெனடிக்ற் மாஸ்ரர் மாடுகளே என்றுதான் மாணவர்களை விழிப்பார். புத்தகத்தை எடுதது வாசிக்கச்சொல்லிவிட்டு ஏதாவது பிழைவிட்டால் எழுந்து அவரைப் பார்த்தபடி நிற்கச்சொல்வார். பின் சுவருடன் சேர்த்தும் சில வேளைகளில் அடிவிழும். பெனடிக்ற் மாஸ்ரரின் அடி காரணமாக சிறுநீர் கழித்த மாணவர்களும் உண்டு.

இதனால் நான் வீடு திரும்புவதற்காக வழங்கப்படும் பணம் தினமும் நடேசருக்குக் காணிக்கையாயிற்று.

இப்படி நண்பர்களுடன் அவர்களது மிதிவண்டியில் சென்று பின்னர் நடந்து வீடு செல்லும் போது வாசிகசாலைகளில் பத்திரிகை படித்து விட்டுச் செல்வதுமுண்டு. கொல்லங்கலட்டியூடாக நண்பர்களுடன் செல்லும் போது கிளானை என்னும் கிராமத்திலுள்ள வாசிகசாலையில் மித்திரன் பத்திரிகை இருக்கும். மித்திரன் அப்போது தினசரிப் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. மித்திரனில் ஜி.நேசனின் பட்லி, ஜமீலா, சாத்தானின் ஊழியர்கள், கறுப்புராஜா போன்ற கிளுப்பூட்டும் க்ரைம்-மர்மத்தொடர்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

கருகம்பனையிலும் ஒரு வாசிகசாலை இருந்தது. இங்கு ஈழநாடு மட்டும் இருக்கும் இந்த வாசிகசாலைக்கு இரவில்தான் பத்திரிகை படிக்க மக்கள் வருவது வழக்கம். இந்தப்பகுதி மக்கள் பெரும்பாலானோர்கள் விவசாயிகளாக இருந்தமையால் பகலில் தோட்ட வேலைகளை முடித்துக் கொண்டு இரவிலேயே வாசிகசாலையில் கூடுவர். வாசிகசாலையில் பத்திரிகை படித்து முடிந்ததும் ஊர்ப் புதினங்கள், அரசியல், சர்வதேச அரசியல் எல்லாம் அலசப்படும். நண்பர் கதிர்காமநாதன் இந்த வாசிகசாலைக்குப் பொறுப்பாளராக இருந்தார். இவரை எல்லோரும் வாத்தி எனறே அழைப்ப்ர் இவரது தந்தை அதிபராக இருந்தபடியால்.

கதிர்காமநாதன் ஒரு சிவாஜி பைத்தியம். நானும்தான். இதனால்நானும் கதிர்காமநாதனும் நண்பர்களானோம். சிவாஜி, எம்.ஜி..ஆர். பேர்களில் ரசிகர் மன்றங்களும் இருந்தன. கதிர்காமநாதன் சிவாஜியின் சாதனைகளைப் பட்டியிலிட்டு ஒரு கொப்பியில் எழுதி வைத்திருந்தார். நானும் அதைப் பார்த்து பிரதிபண்ணி வைத்திருந்தேன். கதிர்காமநாதனுக்கு இந்தியாவிலிருந்த சிவாஜி ரசிகர் மன்றங்களுடனும் தொடர்பிருந்தது. இதனால் இந்தியாவில் படம் வெளியானதும் கதிர்காமநாதனுக்கு படப் போஸ்டர்கள் வந்துவிடும். இதேபோல் தம்பித்துரைக்கும் எம்.ஜி.ஆரின் படப்போஸ்டர்கள் வந்துவிடும்.

இந்தப் போஸ்டர்கள் கீரிமலையில் உள்ள இரு தேநீர்கடைகளை அலங்கரித்துக்கொண்டிருக்கும். அப்போது திரைப்பட இறங்குமதியை திரைப்படக் கூட்டுத்தாபனமே மேற்கொண்டு வந்தது. சில சமயங்களில் இந்தியாவில் திரைப்படம் வெளியாகி பல வருடங்களின் பின்னரே இலங்கையில் படங்கள் திரையிடப்படும். எம்.ஜி.ஆர், சிவாஜி புகழ்பாடும் பத்திரிகைகளும் ரசிகர் மன்றங்களால் வெளியிடப்பட்டன. எனது நண்பர்கள் உறவினர்களில் பலர் எம்.ஜி.ஆர். ரசிகர்களாகவே இருந்தனர்.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த (சிறிது) லூக்காஸ் லொறி பற்றறி (140) விற்பனைக்குண்டு. தொடர்பு: R.பூவேந்திரா, தபாற்கந் தோரடி, ஏழாலை வடக்கு. (16062)

MHC - VX 777 ரக Sony 4400 WZ உடைய வீடியோ சீடி செற் (4Box) விற்பனைக்குண்டு. தொடர்பு: வ.சுந்தரலிங்கம், 72/4, பலாலி வீதி, கந்தர்மடம். (16110)

நல்ல நிலையிலுள்ள Sony 14",21" T.Vக்கள் 2192 - 19,500/- 21Q - 1- 22,000/- National ரேடியோக்கள் RX 37 (ஸ்பீக்கர் கழற்றக் கூடியது) 2,750/- தொடர்பு: S.மகேஸ்வரன் K.K.S. வீதி, (சிறுவர் பூங்கா முன்பாக) மல்லாகம். (16111)

தனிக்கறுப்பு, கலப்பு பால் ஆடு 10 நாள்களில் குட்டி ஈனும். விலை 6,500/-, கன்னி Jamunapari ஆடு ஒருமாதம் சினை ரூபா 3,500/-. பார்வையிடலாம். தொடர்பு: இராஜசிங்கம், தபாற் கந்தோர் ஒழுங்கை, உரும்பிராய். (16112)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (15588)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: 21/61, இராமநாதன் றோட், கலட்டி. (16123)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1Kg - 125/-. சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.: 2867. (16102)

## மணமகன் தேவை

கௌரவ இந்து குடும்பத்தைச் சேர்ந்த, 1975 இல் பிறந்த, மிருகசீரிடம் 7இல் செவ்வாய், கிரகபாவம் 9 உடைய வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் பெண்ணுக்கு அரசாங்கத் துறையில் அல்லது வெளிநாட்டில தொழில்புரிகின்ற மணமகன் தேவை. முழுவிவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1829, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (15950)

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 35 வயதுடைய செவ்வாய் குற்றமற்ற மூலநட்சதத்திரம், லண்டனில் டாக்டராக பணிபுரியும் பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர் அல்லது கணக்காளர் போன்றவர்களை எதிர்பார்க்கின்றனர். முழு விபரங்களுடனும சாதகத்துடனும் தொடர்புகொள்ளவும். சி.யோகேந்திரன், 478, ஆஸ்பத்திரி வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (16122)

இந்து கௌரவ, படித்த, வசதியான குடும்பம், அழகிய, 37 வயது இளம் தோற்றமுடைய மணமகள். பணம், நவீன வசதியான வீடும் பல காணிகளும் சிறந்த சீதனம், சகோதரர்கள் வெளிநாடு. அரசாங்க, தனியார்துறை உத்தியோகத்தர், நிறுவன சுயதொழில் உரிமையாளர் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1828 C/o உதயன், யாழ்ப்பாணம். (15941)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968-10-01இல் பிறந்த, 12இல் செவ்வாய், உத்தராடம் 2ஆம பாதம், லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு லண்டன் அல்லது கனடா பிரிதிவிட உரிமையுள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். விளம்பர இல. 1832 C/o உதயன். (16117)

நட்சத்திரம் உத்தரட்டாதி, 1ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாய் உள்ள 1980 ஆம் ஆண்டு பிறந்த, மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1826, மே/பா உதயன். (15918)

## திருமண சேவை

1979, பரணி, செவ்வாய் 4, படித்த, அழகிய, சுவிஸில் உள்ள மணப் பெண்ணுக்கு ஐரோப்பிய நாடுகளில் வதிவிடம் பெற்ற மணமகன் தேவை. மணமக்களின் தேர்வுக்கு நாடுங்கள்: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (15930)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோவில் வீதி (Temple Road), நல்லூர் கோவில் அண்மையில் 23/4 பரப்பு காணியும், கல்வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகசுந்தரம் 52A, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி. (16072)

## காணி விற்பனைக்கு

யாழ்.நகர மையத்தில் நாக விகாரைக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. வெளிநாட்டு நிறுவனங்கட்கு மிகவும் ஏற்றது. தொடர்பு: T.P. No. 021 222 5178, 021 222 2727. (16105)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (16068)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் சிவந்த, அழகிய, MBBS மகளுக்கு 32 - 35 வயது டாக்டர் வரனைத் தேடுகின்றனர். சீதனம் வழங்கப்படும். முகாமைத்துவ பட்டதாரி, கணக்காளரான கொழும்பில் தொழில்புரியும் அழகான மகனிற்கும் 30வயதிற்கு உட்பட்ட Professionally Qualified மணமகள் தேவை. ஜாதக விவரங்களுடன் தொடர்பு C/o 1831, உதயன். (16082)

## தவறிவிட்டது

யோகீஸ்வரக்குருக்கள் ஜெகதீஸ்வரசர்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (710314071V), விசேட அடையாள அட்டை என்பன 26.03.2003 அன்று கலட்டியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கலட்டி அம்மன் கோயிலில் ஒப்படைத்துதவவும். (16118)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்30

கலாநிதி க.சொக்கலிங்கத்தின் 'அக்கரைச் சீமையின் அனுபவங்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

க.சிவராமலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், வெளியீட்டுரையை பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளையும், நயப்புரையை கவிஞர் சோ.பத்மநாதனும், வியப்புரையை ஆறு.திருமுருகனும், சிறப்புரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்துவர். (எ-8)


## படிவம்

ஆசிரிய கல்லூரிகளில் ஆசிரிய கல்விப் பாடநெறிகளைத் தொடர்வதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் உண்டு.

விண்ணப்ப முடிவு திகதி
21-04-2003

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.



## இந்திய வாஸ்து வல்லுநர் யாழ்.விஜயம்

(மனைப் பொருத்தம்)

"நாள் செய்வதுபோல் நல்லோர் செய்யார்
மனை செய்வது போல் மக்களும் செய்யார்"

நீங்கள் குடியிருக்கும் வீட்டில் பிரச்சினையா?, தொழில் முன்னேற்றம் இல்லையா?, குழந்தை பாக்கியம் இல்லையா?, தீராத வியாதியா?, திருமணத்தடையா? இவைகள் அனைத்தும் நீங்கள் குடியிருக்கும் வீட்டு அமைப்பு குற்றங்களினால் ஏற்படக்கூடியவை. எனவே, இதை நிவர்த்தி செய்து கொள்ளவும், புதுமனை நிலையம் பார்க்கவும் நீங்கள் அணுகவேண்டிய இடம்:

வாஸ்து வல்லுநர் S.S. யோகராஜ்
C\o, சுவிஸ்ஸோ நகைத்தொழிலகம்,
இல. 44\1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்:- 0777 113868

(C/27014)


## பாராட்டு விழா அழைப்பு



ஆனைக்கோட்டை
J/133 கிராம உத்தியோகத்தர்
**திரு.வை.சந்திரராசா**
அவர்கள் தரம் I இற்கு
பதவி உயர்வு பெற்றதையிட்டு
நடைபெறும் பாராட்டு விழா.

இடம்: ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
காலம்: இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணி
தலைவர்: புத்தொளி ந.சிவபாதம் (அகில இலங்கைச் சமாதான நீதிவான்)
பிரதம விருந்தினர்: திரு.து.வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர்)
சிறப்பு விருந்தினர்: திரு. க.ஸ்ரீபதி (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

இவ்விழாவில் இன்னும் பலர் பாராட்டுரைகள் வழங்குவார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

-விழாக் குழுவினர்.

*ஆனைக்கோட்டை.* (16086)

## கண்ணீர் அஞ்சலி



எமது உயிர் நண்பியும், மாணவியுமான
**செல்வி குவலயா ஸ்ரீதரன்**
(தரம் 9 மாணவி, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மணிகல்வி நிறுவனம்.)

அன்னாரது திடீர் மறைவினால் ஆறாத துயரத்தில் மூழ்கியிருக்கும் சைவப் புலவர், வில்லிசைக் கலைஞர் இராசையா ஸ்ரீதரன், திருமதி சத்தியபாமா ஸ்ரீதரன் அவர்களுக்கும், அன்னாரது சகோதரரான ஸ்ரீ.நிதர்சன் அவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, *செல்வி குவலயா*வின் ஆத்மா சாந்தியடைய வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மணி கல்வி நிறுவன
தரம் 9 மாணவர்களும், ஆசிரியர்களும்.

(16119)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி மயில்வாகனம்

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நேற்று (29.03.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மயில்வாகனத்தின் (ஓய்வுபெற்ற MPCS முகாமையாளர், கைதடி) அன்பு மனைவியும் கோபிராஜ் (சுவிஸ்), தாரணி(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவனேஸ்வரியின் (ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி.) அன்பு மாமியாரும் கனகராஜா(கொழும்பு), தேவராஜா(கனடா), மகேஸ்வரி, நடராஜா(அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாதேவி, சாரதா, தியாகராஜா (பிரதேச செயலகம், கோப்பாய்), சத்தியபாமா ஆகியோரின் மைத்துனியும் சாந்தீபன், குமாரதீபன், பாலதீபன் ஆகியோரின் பெரியம்மாவும் மங்களேஸ்வரன், குகதர்சினி, கௌரிகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சு.மயில்வாகனம் (கணவர்)

*கைதடி தெற்கு,*
*கைதடி.* (16116)

## திருமதி தம்பித்துரை சந்திராதேவி

மூர்த்திலேன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தம்பித்துரை அவர்களின் அன்பு மனைவி சந்திராதேவி 29.03.2003இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - வள்ளிப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் தனுஜா, தர்ஷியா, கனிஷ்டா ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமாரன் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் அரிச்சந்திரன், யோகச்சந்திரன், சந்திரமலர், சந்திரறோகினி, அற்புதச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானகுருநாதன், தார்சிலாசுசி, அன்னம்மா, விமலாகாந்தி, செல்வராசா, வரதராணி, துரைமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*மூத்ததம்பி லேன்,*
*மானிப்பாய்.* (16124)

தகவல்:
பொ.யோகச்சந்திரன்.

## தம்பு பாலசுப்பிரமணியம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீலிப்பந்தனை காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பு பாலசுப்பிரமணியம் 28.03.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புச் சகோதரனும் பார்வதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) பாசமிகு கணவரும் தெய்வமாலினி, காலஞ்சென்ற பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரலிங்கத்தின் (அதிபர், யா/தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம், காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் கோயில் திருப்பணிச்சபை பொருளாளர்) அன்பு மாமனாரும் சர்மினா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), யசோதரன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 116, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தில் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*116, அம்பலவாணர் வீதி,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.* (16120)

தகவல்:
க.சுந்தரலிங்கம் (மருமகன்)

## சின்னத்தம்பி பொன்னம்பலம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் 28.03.2003 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் Dr. மயூரதாஸ் (லண்டன்), அம்பிகை, பவானி, செந்திநாதன், திருமதி நந்தினி, கிருஷ்ணமூர்த்தி, திரு.திருமதி இந்திரகுமாரன் (கனடா), திருமதி பத்மினி விக்னராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற ராதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சரவணனார், சொக்கலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி விக்கினேஸ்வரி இராமச்சந்திரன் (லண்டன்), திருமதி மகேஸ்வரி சிறிஸ்கந்தராஜா (சென்னை), சிறிதரன் (லண்டன்), செல்வி நகுலேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 28-03-2003 வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*பூங்காவனம்*
*டச்சு வீதி,*
*சண்டிலிப்பாய்.* (16125)

தகவல்:
பொ.செந்திநாதன்

## திருமதி பாலாம்பிகை வைத்திலிங்கம்

(பாலா ரீச்சர் முன்னாள் ஆசிரியை,
யா/சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை.)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கல்வளவு, தெல்லிப்பழை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலாம்பிகை வைத்திலிங்கம் 28.03.2003 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாகருணாகரன் (மாந்தை கிழக்கு கல்விக்கோட்டம் - திட்டமிடல் உதவியாளர்), திருமதி மனோராமா (கொழும்பு), கிரிதரன் (இலங்கை மின்சார சபை,சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி (ஆஸ்திரேலியா), சந்தியாகு (சிரியா),தாமரைச்செல்வி ஆகியோரின் மாமியாரும் மதனன், மாதங்கி, ஜனதன், ஜீவிதன், கார்த்திகன், மனுவித்தியன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வத்தளையிலுள்ள 123/6,தெலங்கபாத றோட்டில் அமைந்த அவரது மகனின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாதனை,*
*தெல்லிப்பழை கிழக்கு,*
*தெல்லிப்பழை.* (சி-27045)

தகவல்:
கிரிதரன் (மகன்)

| | | | |
|---|---|---|---|
| சூ. புதன். | | சனி. ராகு | |
| வெ. சந். | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| செ. | கேது | | |

# இந்த வார இராசி பலன்

மகாதேவா ஜோதிடம்

## 30-03-2003 - 05-04-2003

### மாற்றம்

**30.03.2003 இல் சதயம்** - கும்பத்தில் வெள்ளி நிற்கும். மேடத்தில் **புதன் மாறும்.**

அரசியல் **பேச்சு** ஒரு தொடராக இருக்கும். இந்தியாவின் எண்ணெய் விநியோகம் எமது நாட்டில் அதிகரிக்கும். ஈராக்கில் அமெரிக்கப் படை மேலும் ஊடுருவி தலைநகர் **பக்தாத்தை** கைப்பற்றி புதிய அரசாங்கம் அமைக்கும் நிலை **தோன்றும்.** மேற்கு நாடுகளில் தீவிரவாதிகளால் திட்டமிட்டு அழிவுகள் தொடர இடமுண்டு. இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றங்கள் பல அழிவுகளைச் செய்யும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

சிலர் பேசிய படி நடப்பதில்லை. அதனால் பலருடைய மனசுகள் குழம்பியபடி இருக்கின்றன நீங்கள் அறிவதில்லையா? எனவே, நீங்களும் தொழில்ஸ்தானத்தில் பொருள் விஷயத்தில் அவதானமாக இருங்கள். பணவரவு, தூரதேசச் செய்திகள், பொருள் தவறும், இனஜனப் பகை, புத்திரருக்குச் சிறப்பு, ஓடியாடித் திரிதல் என்பனவும் வயிற்றில் நோ, தலைச்சுற்றும் ஏற்படும். பிரயாணத்துறை, மருந்துத் துறை, பாதுகாப்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம்.

*அதிர்ஷ்ட நாள்: வெள்ளி*

### இடபம்

சிலர் பலருக்கு விஷ ஊசி வாயால் ஏற்றுவதனால் இந்த சமுதாயத்தில் ஒரு சிலருக்கு தாக்கங்கள் ஏற்படுகின்றன. அளவறிந்து தொழிலிடத்தில் பேசவும். அல்லது வீண் பகைவரும். இடமாற்றங்கள் சிலருக்கு வரலாம். ஏழரைச் சனித்தாக்கம் குடும்பத்தில் வீண் பிரச்சினை வரும். நண்பர்களுடன் மனஸ்தாபம். அரச உதவி கிடைக்கும். வீடு, வாகனச் சிறப்பு மாற்றங்கள் வரும். நெஞ்சு நோ, உஷ்ண பீடைகள் வரும். செய்தித்துறை, புத்தகத்துறை, வியாபாரத்துறையினர்கள் நன்மை அடைவர். மாணவர்களுக்கு பலவிதச் சிறப்புக் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி*

### மிதுனம்

உலகத்தின் இயக்கமும் மனிதர்களின் மனமாற்றமும் விதியின் விளையாட்டாகும். தொழில் ஸ்தானத்தில் சிலர் உபத்திரவம் கொடுப்பர். தூரதேசச் செய்திகள் வரலாம். உடல்நிலை பாதிப்பு, வீடு, மனை, காணி சம்பந்தமான கருத்து வேற்றுமைப்படல் மேலதிகாரிகளுடன் வாக்குக் கலகம், எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை ஏற்படல் என்பன நடக்கும். நாரி நோ, வாய்வு, உஷ்ண பீடைகள் வரலாம். செய்தித்துறையினர், குருத்துறையினர் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்குத் தடுமாற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியா, வெள், சனி (மதியம்).*

### கடகம்

கிரக பாவ தோஷம். செவ்வாய் தோஷம் - திருமணத்தில் மிக அவதானமாகப் பார்க்க வேண்டும். அல்லது ஒரு தம்பதிகளின் வாழ்வில் பலவித தாக்கங்களைக் கொடுக்க இடம் உண்டு. பிரயாணத்துறை, செய்தித்துறை, அரசியல்துறையினர்கள் நன்மை அடைவர். கருத்து வேற்றுமை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மூத்தவர்கள் உதவி செய்து தருவர். கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை. அல்லது வீண் பகை வரும். சல வருத்தம், நரம்புப் பாதிப்பு, காய்ச்சல் என்பன வரும். வைத்தியச் செலவைக் கட்டுப்படுத்தவும். மாணவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

### சிங்கம்

மனிதர்கள் அமைதி ஆகிவிட்டால் பல உண்மைகளை அவர்கள் உணரமுடியும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். பணவரவு அதிகரிக்கும். அயலவர்கள் உதவி செய்வர். தூரத்துச் செய்தி நிறைவு கொடுக்கும். உடல்நிலைப் பாதிப்பு கவனமாக இருந்தால் தவிர்க்கலாம். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக இருக்கவும். சளி, உஷ்ணபீடைகள், நாரி நோ கொடுக்கும். குருத் துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி*

### கன்னி

இப்பொழுது இளம் சந்ததிகளுக்கு புத்தி சொன்னால் பிடிக்காது. பிறேக் இல்லாத வாகனம் போன்று நடந்து நல்லவர்களின் மனத்தைப் புண்படுத்துகின்றார்கள். தொழில் ஸ்தானத்திலும் இப்படியானவர்கள் உங்களை வேதனைப்படுத்துவர். உறவினர்களுக்கு உடல் நிலை பாதிப்பு கொடுக்கும். இடமாற்றங்கள் சகஜம். எதிர்பாலாருக்கு (குடும்பத்தில்) நல்லதல்ல. பொருள் தவற இடம் உண்டு. சில உறவினர் வரவு, வீட்டில் கலகலப்பு கொடுக்கும். மாணவர்களுக்கு புதிய சித்திகள் வரும். நாரிநோ, வாய்வு வருத்தம், தலை, கைகால் விறைப்பு கொடுக்கும். நகைத் துறை, வியாபாரிகள், தோட்டத்துறையினர், பண்ணைத் தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி, வெள்ளி*

### துலாம்

பலருக்கு உண்மைகள் விளங்க அதிக நேரமோ காலமோ எடுக்கும். ஆனால் ஒரு சில புத்திஜீவிகளுக்கு ஓர் அசைவில பல உண்மைகள் புரிந்து விடுகின்றது. அவர்கள் தப்புவதை தொழில்ஸ்தானத்தில் அறிவீர்கள். பணவரவு, உடல்நிலையில் ஒய்வு, கால்வருத்தம், முதுகு வலி என்பன வரும். வைத்தியம் செய்ய சுகமாகும். பொருள்களில் நிதானமாக இருக்கவும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும். குருத்துறை, சட்டத்துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி, வெள்ளி*

### விருச்சிகம்

பட்டென்று சொல்வதை சட்டென்று புரிந்தாலும் பிடிவாதம் விடாது. மனிதர்களின் மனங்கள் விசித்திரமானவை. ஆனால், உங்கள் பிடிவாதத்தால் நீங்கள் சாதனைகளையே படைப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் மற்றவர்களின் கருத்துக்குப் பயப்படுவீர்கள். பொருள் வரவு, தூரத்துச் செய்திகள், சகோதரர்கள், பிள்ளைகளுக்கு சிறப்பு, தூரத்து உறவினர்கள் உதவுதல், பழைய பாக்கிகள் வரச் சந்தர்ப்பங்கள் உண்டு. கால், தொண்டை வருத்தம், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். மாணவர்களுக்கு புதிய கல்விச் சிறப்பு, பெரியவர்கள் உதவுவர். விவசாயத் துறை, வியாபாரத்துறை, இரும்புத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். *அதிர்ஷ்நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### தனுசு

விதிச் சக்கரம் விசித்திரமானது. சுழன்று வந்து ஒரு இடத்தில் நிற்கும் பொழுதுதான் எல்லாம் புரிகின்றது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கும். புதிய சூழ்நிலை உருவாகும். சகோதர வழியினரின் உதவிகள் கிடைக்கும். வருங்கால புதிய திட்டங்கள் உருவாகும். தூரதேசச் செய்திகளால் மனஆறுதல் கிடைக்கும். முதுகுவலி, வாய்வுத் தொல்லை வந்து போகும். இடமாற்ற யோசனை வரும். குருத்துறை, வைத்தியத்துறை, சட்டத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைவரும், மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பு கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

### மகரம்

மனம் இரண்டுபட்டால் அருகில் இருப்பவர்களுக்கு உங்களைக் கலவரப்படுத்த நீங்களே வாய்ப்புகளைத் தேடிக் கொடுப்பவர் ஆவீர்கள். தொழில ஸ்தானத்தில் வேண்டாவெறுப்பு, கண்டிப்பு, மாற்றங்கள் என்பன சகஜம். தூரத்துச் செய்திகள் வரும். நாரிநோ, புதிய இடம் செல்லல், வீண்பழி கேட்டல், கால் பிடிப்பு என்பன வரும். நகைத்தொழில், குருத்தொழில், பிரயாணத்துறை போன்ற தொடர்பானவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். மாணவர்களுக்கு புதிய கல்வியால் சிறப்பு வரும். *அதிர்ஷ்டநாள்கள் :-ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

மனிதவாழ்வு பொருளாதார அடிப்படையானது. பணமிருந்தால் பல செயற்பாடுகளை உலகில் செயற்படுத்தலாம். தொழில் ஸ்தானத்தில் பொருள் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் வரும். அடிக்கடி கோபம், அமைதியற்ற நிலை வந்து போகும். மனைவியுடன் கருத்து வேற்றுமைப்படல், பொதுத்தொண்டு, தெய்வத்திருப்பணி போன்றன வந்து போகும். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமை என்பன வரும். கைகால் பிடிப்பு, நாரிநோ, வாய்வுத்தொல்லை என்பனவும் மாணவர்களுக்கு இடமாற்றங்களும் பொருள் வரவும், குருத்துறை, பிரயாணத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகளும் அதிகரிக்கும். *அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.*

### மீனம்

மனிதவாழ்வு ஒரு கலவைப் பலனைக் கொடுக்கவல்லது. அவரவருக்கு கிரக அடிப்படையில் புதிய பூவுலக வாழ்வு தொடங்கி முடிய உருவாக்கப்பட்ட சுழல்சக்கர ரீதியிலானது. சிலந்தி வலை போன்று மனோ திட்டங்கள் மாறிமாறி உருவாகியபடி இருக்கின்றதை எண்ணிக் கலங்காதீர்கள். உங்கள் தொழில் தொடர்ந்து நடக்கப் பலர் உருவாகிவருவர். பணவரவு, வைத்தியச் செலவு அதிகரிக்கும், நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு புதிய கல்வித்திட்டங்கள் உருவாகும்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.*

---

# நம்பி மீட்படைவோம்!

'தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்'

மனிதா! உன்னுடன் ஓர் நேர் காணல் உன் வாழ்க்கையில் யாரை நம்புகின்றாய்? உன் வாழ்வில் யாருக்கு முதலிடம் கொடுக்கின்றாய்? சற்று சிந்தித்துப்பார்! உறவுகளே தவக் காலத்தின் 4ஆம் வாரத்தில் கால் பதிக்கும் நாம் பயணிக்கும் வாழ்வுப்பாதையில் திரண்டு பேரிடர் தாக்கும் போதும், மலையென சோதனை நம் வாழ்வை சோதித்தாலும் நம்பி வாழ்வு பெறுவது ஒருவரிலே தான். அவரே சிலுவையில் பலியான மாபரன் யேசு.

**தவக்காலச்சிந்தனை - 26ஆம் நாள் -**

சிலுவையில் அறையப்பட்ட யேசுவை நம்பிக்கையுடன் உற்று நோக்கிய யாரும் வாழ்வை இழந்ததாக வரலாறே இல்லை. நிலைவாழ்வுக்கு சிறந்த வழி யேசுவை நம்புவதே. அதற்காகவே அவர் உயர்த்தப்பட்டார். 'நம்பிக்கை கொண்டு கடவுளுக்கு கீழ்ப் படிந்து உரிமைப் பேறான நாட்டிற்கு சென்றார் ஆபிரகாம்' (எபி.11:8) யானையின் பலம் தும்பிக்கை, மனிதனின பலம் நம்பிக்கை என்பார்கள். இறை நம்பிக்கை என்பது இதயத்துடிப்புப் போன்றது. இதயம் துடிக்க மறுத்து விட்டால் உயிர் இல்லை என்கிறோம். அந்த நம்பிக்கையின் நாயகனை நம் வாழ்வில் நம்பாவிடில் நம் வாழ்வு செத்துவிட்ட வாழ்வாக மாறிவிடும்.

யேசு இலாசருக்கு உயிர் கொடுப்பதற்காக கல்லைப் புரட்டச் சொன்னபோது மார்த்தா யேசுவிடம் 'ஆண்டவரே நான்கு நாள் ஆயிற்றே நாற்றம் எடுக்குமே' என்ற போது. யேசு 'நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் கண்பாய்' (யோவான் 11:39) என்று கூறினார்.

நம்பிக்கையே உன் வாழ்வில் ஊன்று கோலாகட்டும். வாடிய மனங்களை தேடியே தேறுதல் கூறிடும் தேவன், உடைந்த உள்ளங்களுடன், உருக்குலைந்த கனவுகளுடன், நாற் சுவர் சிறைக்கூடங்களுள் வலிந்து புகுத்தப்பட்டு நலிவு காணும் மாந்தரையும் நோய்களின் தாக்கத்துடனும், மனத்தின் இடர்க்கட்டுக்குள் அகப்பட்டு, அமைதி நாடி நகரும் யாவரையும், தம் இன்ப அருட்சுனையில் போஷித்திட இருகரம் விரித்து காத்திருக்கின்றார் யேசு. ஆழமான அன்புடன் யேசுவை உற்று நோக்கி நிலை வாழ்வுக்குத் தடையாகவுள்ள அனைத்தையும் அகற்றி அவரையே நம்பி மீட்படைவோம்.

**செ. பிறின்ஸ்லி**

---

# வைத்தியசாலை நிர்வாகத்தின் அசட்டையால் இளம் கர்ப்பிணித்தாய் அகால மரணம்!

## பொகவந்தலாவையில் இடம்பெற்ற பரிதாபச் சம்பவம்

கொழும்பு,மார்ச்30

வைத்தியசாலை நிர்வாகத்தின் அசட்டை காரணமாக 23 வயதுக் கர்ப்பிணித் தாய் அகால மரணமடைந்தார்.

பொகவந்தலாவ பினான்டேசன் கேர்க்கஸ் வோல்ட் மேற்பிரிவில் தொழிலாளியாகக் கடமையாற்றிய வீரப்பன தனலட்சுமி என்ற இளம் தாய்க்கே இப்பரிதாப மரணம் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலை அதிகாரிகளின் அசமந்தப் போக்கைத் தட்டிக்கேட்ட கணவரும் அவருடன் உதவிக்குச் சென்ற இருவரும் பொகவந்தலாவை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி இரவு கேர்க்கஸ்வோல்ட் தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த வீரப்பன் தனலட்சுமி என்ற கர்ப்பிணித் தாய்க்குப் பிரசவ வேதனை ஏற்பட்டது.

பெண்ணின் கணவரும் அயலவர்கள் இருவரும் தனலட்சுமியை சினங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அப்போது நேரம் இரவு 9மணி வைத்தியசாலையில் கடமையில் இருந்த டாக்டர் பிரசவ வேதனையால் கஷ்டப்பட்ட அப்பெண்ணை வைத்தியசாலையில் சேர்க்கவோ, சிகிச்சை அளிக்கவோ மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.இதனால் பெண்ணின் கணவருக்கும் டாக்டருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே, அப்பெண்ணை பொகவந்தலாவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்துள்ளனர்.

வைத்தியசாலைக்கு வந்த பொகவந்தலாவை பொலீஸார் அப்பெண்ணின் கணவரையும் உடன் வந்த இருவரையும் கைது செய்து நோர்வூட் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். சினங்கன் வைத்தியசாலை நிர்வாகம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே நோர்வூட் பொலீஸாரின் பணிப்பின் பேரில் தாம் மூவரையும் கைது செய்ததாகப் பொகவந்தலாவைப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பொகவந்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இப்பெண்ணின் நிலைமை மோசமாகவே, அங்கிருந்து நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு அவர் மரணம் அடைந்துள்ளார்.

பிரசவ வேதனையால் அவதிப்பட்ட இப்பெண்ணுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் தாயையும் குழந்தையையும் காப்பாற்றி இருக்க முடியும் என நாவலப்பிட்டி வைத்தியசாலை டாக்டர் தெரிவித்துள்ளார்.

(ஒ)

---

**நாடு முழுவதிலும் இயங்கும்**

# 3 ஆயிரத்து 829 பாடசாலைகளில் 150 இற்கு குறைவான மாணவர்கள்

நாடு முழுவதிலும் 150 இற்குக் குறைவான மாணவர்கள் கல்விகற்கும் 3 ஆயிரத்து 829 பாடசாலைகள் உள்ளன என மனிதவள அபிவிருத்தி,கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 2002 ஆம் ஆண்டிற்கான புள்ளி விவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

50 மாணவர்களுக்கு குறைவான தொகையினர் கல்வி கற்பதற்கென ஆயிரத்து 360 பாடசாலைகளும்,51 இல் இருந்து 100 வரையிலான மாணவர்கள் கல்வி கற்பதற்கென ஆயிரத்து 334 பாடசாலைகளும்,101 இலிருந்து 150 வரையிலான மாணவர்கள் கல்வி கற்பதற்கென ஆயிரத்து 135 பாடசாலைகளும் இயங்கிவருகின்றன.

ஒரேயொரு ஆசிரியர் மட்டும் பணியாற்றும் பாடசாலைகள் 109. இரு ஆசிரியர்கள் கடமையாற்றும் பாடசாலைகள் 298. நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றும் பாடசாலைகள் 109 ஆகும் - என்று அதில் உள்ளது.

(எ)

# கலாசார மோதுகையில் உடைத்து நின்ற 'பூஜா'

தலைவிரி கோலமாக அரை நிர்வாணத்துடன் நின்ற நிலையில் செம்பிலே நீரை எடுத்து தனது தலையில் ஊற்றினாள் நஞ்சனா. 'பூஜா' அழிந்துவிட்டாள் என்று கத்தினாள்.

யார் இந்தப் 'பூஜா'? நஞ்சனா ஏன் 'பூஜா'வை அழிக்க வேண்டும்? அரங்கமே அதிர ஏன் கத்த வேண்டும். அரங்கம் என்றவுடன் இப்போது புரிந்திருக்கும் எங்கோ ஒரு மேடையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில்தான் இவ்வாறானதொரு சம்பவம் நிகழ்ந்திருக்கும் என்று.

இது இடம்பெற்றது! நாவலர் கலாசார மண்டபத்தில் - அண்மையில் நடைபெற்ற 'பூஜா' என்னும் தனியாள் பங்குபற்றும் அரங்க நிகழ்வில். மலேசியாவைச் சேர்ந்த 41 வயது ராணி மூர்த்தியின் அட்டகாசத்தின் போது.

இந்து சமயத்தவர்களிடையே காணப்படுகின்ற பல்வேறு 'சடங்குகள்' முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெண் 'டிஸ்கோ' ஆட முடியும் என்பதுதான் ராணி மூர்த்தி அங்கு பிரசன்னமாக்கிக் காட்டியது. இவர் இந்து சமயத்தில் இருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டவர். 12 பாத்திரங்களாக நின்று இந்து சமயத்தின் சடங்குகளை கொச்சைப் படுத்துகிறார்.

யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு நிலவி வருவது இந்து சமயம். 'சிவ பூமி' என்று வர்ணிக்கப்படும் மண் அது. அந்நியர்களின் ஆட்சியின் போது தான் கிறிஸ்தவ சமயம் இங்கு பலாத காரமாகப் புகுத்தப்பட்டது. அநேக இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்துக்கு மாற்றப்பட்டார்கள். இன்றும் அது தொடர்கின்றது. மக்களிடையே காணப் படுகின்ற வறுமை, ஏற்றத்தாழ்வு, சாதி போன்ற பலவீனங்களை சமய மாற்றம் செய்பவர்கள் பலமாகப் பயன்படுத்துகிறார்கள்.

மண்டபம் மங்கலான வெளிச்சத்தில் பார்வையாளர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க முடியவில்லை. மேடையில் வெளிச்சம் பரவி இருந்தது. 'பூஜா' பார்வையாளர்களுக்கு மத்தியில் நடந்துவந்து மேடையில் ஏறுகிறாள். நிகழ்வு ஆரம்பமானது.

ஜாதகம் சில நாள்களுக்கு நல்லவற்றையும் சில நாள்களுக்கு தீயவற்றையும் ஆருடம் கூறுகின்றது. ராணி மூர்த்தி காலை 6.45 மணிக்கு பிறந்தவர். இந்த நேரம் மேற்கத்தேய இராசி மண்டல அமைப்பின்படி நல்ல முகூர்த்தமாக அமையவில்லை. இது பல தொல்லைகள் தரும் இராசியாகவே கருதப்பட்டது.

இதனால் ஒவ்வொரு கோளின் மாற்றத்திற்கும் ஏற்றவகையில் சடங்குகள் செய்யப்பட்டன. சமயச் சடங்குகளைச் செய்யத் தவறும் பட்சத்தில் ராணி மூர்த்தி நோய்வாய்ப்படவும், பரீட்சையில் தவற வேண்டியும் ஏற்படலாம் என்பதும், வேலை பார்க்கும் இடத்தில் சக ஊழியர்களின் பொறாமைக்கு ஆளாக நேரிடும் என்றும் சொல்லப்பட்டது.

தனது மனதுக்குப் பிடித்த கணவனைத் தேடுவது அவருக்கு மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாக அமைந்துவிட்டது. 'நான் திருமணம் செய்தாலும் ஓர் ஆண்டிற்குள் விதவை ஆகி விடுவேன்' இவ்வாறு ஆருடம் கூறப்பட்டது.

சோகமான இந்த நிலை உருவாவதைத் தவிர்க்கும் வகையில் ஒரு நாள விடிகாலை 4 மணிக்கு நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு வாழை மரம் ஒன்றுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள்.

சமயச் சடங்குகள் முடிந்ததும் வாழை மரம் சமயத் தலைவரால்



வெட்டி வீழ்த்தப்பட்டது. இந்தச் சடங்கின் மூலம் அவள் திருமணமான பெண் என்பதும் கணவனை இழந்த விதவை என்பதும் ஒரே நாளில் வெளிப்படுத்தப்பட்டது.

தனது சொந்த வாழ்வில் நடந்த சமயச் சடங்குகளால் பாதிப்படைந்த நிலையில் இருந்த ராணிமூர்த்தி, தனி மனித நடிப்பின் மூலம் அதனை வெளிப்படுத்துகிறார். 'பூஜா'வை அதற்குப் பயன்படுத்துகிறார். இங்கிலாந்தில் இதற்கு அமோக வரவேற்பு இருந்தது என்பதற்காக யாழ்ப்பாணத்திலும் அதேயளவு வரவேற்பை எதிர்பார்ப்பது தவறு.

அவருடைய வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக இருந்திருக்கலாம். இதனால் சுதந்திரமாக ஒருவரை நேசிக்கவோ அதன் மூலம் எல்லாவிதமான சந்தோஷங்களையும் அனுபவிக்கவோ தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்கவோ முடியாது போயிருக்கலாம். அவருடை நிலைதான் எல்லா இந்துப் பெண்ணுக்கும் என்று அவர் எண்ணுவது தவறு.

குடி பெயர்ந்து வாழும் ஒருவரின் கலாசாரம் அந்த நாட்டின் கலாசாரத்தோடு ஏற்படுத்துகின்ற சிக்கலான மாற்றங்களை ஆழமாக ஆராயும் முயற்சியாக இது அமைகின்ற போதிலும், இது யாழ்ப்பாணக் கலாசாரத்தின் கூறுகளை சிதைக்கும் வகையில் அமைந்திருந்தமை யாரும் மறைக்க முடியாது. அந்நிய நாடுகளில் கலாசார சிக்கலை எதிர்கொள்வோருக்கு ஒருவேளை இதுவே மிகப் பெரிய விசயமாக இருக்கலாம். ஆனால், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இது பொருத்தமற்ற ஒரு நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

ஜாதகம் பார்ப்பது என்பது ஆபத்தைத் தரக்கூடியது என்பது இவர் பிரதானமாகக் கூற வந்தது. அதில் உண்மை இருக்கலாம். ஆனால், அதனைச் சொல்ல வந்த முறையில் 'சடங்குகளை' முற்றாகத் தூக்கி எறிவதன் மூலம் ஜாதகம் பார்த்தலை அகற்ற முடியும் என்ற தொனிபட கூறி இருப்பது பல சந்தேகங்களை எழுப்புகின்றது.

ஆலயத்தில் நடைபெறுகின்ற சடங்கு முறைகள் உண்மையில் மக்களை உள நெருக்கீடுகளில் இருந்து விடுதலை அடையச் செய்யும், மனச் சாந்தியைக் கொடுக்கும் கருவிகளாக இருக்கின்றன. அதனை முழுக்க முழுக்க புறந்தள்ளும் வகையில் ராணி மூர்த்தி இந்துக் கடவுள்களையும் ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளையும், சடங்குகளையும் ஏளனம் செய்கின்றார்.

ஜாதகம் பார்ப்பது என்பது விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்று கூறிவிட முடியாது. அவரது குடும்பத்தவர்கள் நீண்ட காலமாக நம்பி வந்த பாரம்பரியங்கள் பண்பாடுகளில் இருந்து விலகி அவர் நடக்கிறார் என்பதற்காக அதனையே எல்லா இந்துப் பெண்களும் பின்பற்றுங்கள் என்று கூறுவது அபத்தமானது. கலை வடிவங்கள் சில வேளைகளில விபரீதமான பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும் - சமநிலையை குலைத்து விடும்.

பூஜாவாகிய நஞ்சனா பிறந்த நேரத்தில் கணிக்கப்பட்ட ஜாதகத்தின படி குற்றம் நிறைந்தவள். சிறந்த நற்குணங்கள் கொண்ட இந்துப்பெண் திருமணம் ஆகும் வயதை அடைந்து விட்டாள். ஆனால், ஜாதகம் திருமண வயதை நீட்டிக் கொண்டு செல்கிறது. மனதிலே விரக்தி. ஜாதகம் பார்ப்பது அறவே பிடிக்கவில்லை அவளுக்கு ஆசைகள் நிறைவேறவில்லை.

நஞ்சனாவில் படிப்பு, திருமணம், வேலை இதற்காக ஜாதகத்தின் பிரகாரம் குற்றங்களை நிவர்த்தி செய்ய இந்து சமயச் சடங்குகள் பல கடைப் பிடிக்கப்படுகின்றன.




இந்து சமயத்தவர்களின் பூப்புச் சடங்கு, பிள்ளையார், முருகன் ஆலயங்கள், சிவபுராணம், மகாபாரத இதிகாசம், விளக்கேற்றி வழிபாடு செய்தல், வாழைக்கு திருமணம் செய்து வைத்தல், வாழையை மதகுரு வெட்டி நஞ்சனாவை விதவையாக்குதல் போன்ற பல கூறுகள் முறையற்ற விதத்தில் கையாளப்பட்டுடன இவை எல்லாம் நஞ்சனாவை அடக்கி ஒடுக்கி மனவிரக்தியை ஏற்படுத்தும் 'பூஜா' என்று முடிச்சுப் போடப்பட்டது.

மலேஸிய கலாசாரத்துடன் ஒத்துப்போக முடியாத இந்து சமயக் கலாசாரம் 'பூஜா'. அதனை உடைத்து எறிந்து சமயத்தை, வழிபாட்டை, சடங்குகளை கேவலமாகப் பேசி 'டிஸ்கோ' ஆடத் துடிக்கும் - சுதந்திரமாக வாழத் துடிக்கும் - நஞ்சனா.

தலைவிரி கோலமாக நின்று செம்பிலே நீரை எடுத்து தலையிலே ஊற்றி 'பூஜா' இறந்து விட்டாள் என்று அரங்கம் அதிரக்கத்துகிறாள்.



மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தால் நடத்தப்பட்ட சமாதான ஓவியப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் வென்ற ஓவியங்களையே படத்தில் காண்கிறீர்கள். எஸ்.தினேஸ்குமார் (விக்ரோறியா கல்லூரி), ஜே.காமல் (திருக்குடும்ப கன்னியர் மடம்), த.தஜேந்திரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோர் முறையே மூன்று இடங்களையும் பெற்றனர்.

# நூல் வரிசை



மனிதத்தின் இருப்பைத் தேடும் பணியில் உழைத்துக் கொண்டிருக்கும் 'ஆத்மா' சஞ்சிகையின் அடுத்த இதழ் வெளிவந்துள்ளது.

12 பக்கங்களின் ஒவ்வொரு பக்கமும் யாழ்ப்பாண சமூகத்தின் ஆத்மாவோடு உரையாடுகின்றது. குழந்தைகள், பிள்ளைகள், சிறுவர்கள் போரின கோரப்பிடிக்குள் சிக்கி போர் பதித்துச் சென்ற தடயக் குழிக்குள் இடறி விழுந்து கொஞ்சம் கொஞ்சமாய் சீரழிந்து செல்லும் நிலையில் யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் இந்த 'ஆத்மா'வில் பேசப்படுகிறது.


பதித்துக் கொள்ள.....

14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பாடசாலையில் சேராமலோ அல்லது சேர்ந்து பின் நின்று போவதோ எவ்வாறு? காரணம் யார்? குழந்தைகளா? பெற்றோர்களா? பாடசாலைகளா? தாங்களே முடிவெடுக்கும் செய்வினையா? அல்லது அவ்வாறான நிலைக்குத் தள்ளப்படும் செயற்பாட்டு வினையா? கோளாறு எங்கே? எங்கே முரண்பாடு...?

ஆத்மாவில் இருந்து....

✪ ✪ ✪ ✪

**A Hard book to all Computer Users**




என்ற இந்த நூல் கணனி பற்றிய, அடிப்படைத் தத்துவங்கள் அடங்கிய ஒரு வழிகாட்டி. கணனி பற்றி அறிந்து கொள்ளாதவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். கணனித்துறையில் வேலைபுரியும் எவரும் இலகுவில் பயன்படுத்தக் கூடிய ஆங்கில மொழியில் அமைந்துள்ளது.

நூலாசிரியர் உதய சங்கர் தகவற்றுறை தொழில் நுட்ப முகாமைத்துவ ஆலோசகராக 15 வருட அனுபவம் வாய்ந்தவர். காலத்தின் தேவை உணர்ந்து இந்த நூலினை ஆசிரியர் எழுதியுள்ளார். மாணவர்களுக்கும், கணனியை அறிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும், பல துறைகளிலும் தொழில் புரிபவர்களுக்கும் இந்த நூல் பயன்படக் கூடியது.

✪ ✪ ✪ ✪




இலக்கியச் சஞ்சிகைகள் வரிசையில் புதிதாகத் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது 'திசை புதிது' என்ற காலாண்டு சஞ்சிகை.

கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கும் இந்தச் சஞ்சிகையின் முதலாவது இதழ் உதயனுக்குக் கிடைத்திருக்கிறது.

கவிதை, சிறுகதை மற்றும் பல முக்கிய அம்சங்களுடன் மூத்த எழுத்தாளர்களின் எழுத்தாக்க அனுபவங்களும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

மூத்த எழுத்தாளர்களின் இலக்கியத்துறை அனுபவங்கள் புதிய எழுத்தாளர்களை இலக்கிய உலகிலே வெற்றி நடைபோட வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. மொழி பெயர்ப்பு ஆக்கங்களும் குறிப்பிடத்தக்கன.

முதலாவது இதழ் என்பதால் ஒரு சில குறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. எனினும், அடுத்த இதழ்கள் அந்தக் குறைகளை தவிர்த்துக் கொள்ளும் என்று நம்பலாம்.

இச்சஞ்சிகையின் நோக்கம் பற்றி ஆசிரியர் அதன் முதலாவது இதழில் குறிப்பிடும்போது -

இளையவர்களால் இளையவர்களுக்காகத் தொடக்கப்பட்டிருக்கும் புதிய இதழ் இது. புதிய சிந்தனைகளை, புதிய முகங்களை, புதிய கருத்துக்களைத் தேடிப் புறப்பட்டிருக்கிறோம். திசை புதிது. இளையவர்களிடமிருந்து அதிக பங்களிப்பையும், மூத்தவர்களிடமிருந்து சிந்தனை, அனுபவப் பகிர்வு என்பவற்றையும் எதிர்பார்க்கிறோம்.

இது தேடல்தான். தேடலின் வெற்றி எங்களில் மட்டுமல்ல, உங்களிலும்தான் தங்கியிருக்கிறது - என்கிறார்.

## அவமானப்படுத்தப்பட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாளரத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது.
இதுவரை காலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப் போன்று
நான் என்னைக் கண்டெடுத்துள்ளேன்.

என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக் கொள்ள முடியாது.
கண்களைப் பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கிழிக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது.

நிராகரிக்கப்பட முடியாதவள் நான்.

இனியும் என்ன,
தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான்
பிரசன்னமாயுள்ளேன்
என்னை
அவமானங்களாலும்
அநாகரிக வார்த்தைகளாலும் போர்த்துங்கள்
ஆனால்,
உங்கள் எல்லோரினதும்
ஓர் அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துக்களை
அசுத்தம் செய்கிறேன்.
என்னுடைய நியாயங்கள்
நிராகரிக்கப்படும் வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே.

- சிவரமணி